காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

20-2-66

கேள்வி ? பதில்

(1) விஞ்ஞான வித்தகர்களின் துணைகொண்டு, தொழில் விவசாயம் எனும் இரு துறைகளிலும் புரட்சிகரமான முன்னேற்றம் காண முடியும் என்று அமைச்சர்கள் பேசுகிறார்களே அதுபற்றி என்ன கருதுகிறீர்?

மகிழ்ச்சி அடைகிறேன், அது பற்றி அமைச்சர்கள் பேசவாவது முன்வந்திருக்கிறார்களே என்று. ஆனால் உள்ளபடி விஞ்ஞான ஆராய்ச்சி வளரவேண்டுமானால், அதற்காக இப்போது செலவிடும் பணம் போதவே போதாது. இப்போது ஆண்டொன்றுக்கு 7 அல்லது 8 கோடி ரூபாய் அளவுக்குத்தான் செலவிடுகிறார்கள். அமைச்சர்களின் ஆடம்பரப் பயணத்தின்போது ஆகிற பெட்ரோல் செலவு கூட இந்தத் தொகையைவிட அதிகமாக இருக்கும். இவ்வளவு பெரிய நாட்டில் 8 கோடி ரூபாய் அளவுதானா ஆராய்ச்சித் துறைக்கு.

(2) கெனியா போன்ற பல ஆப்பிரிக்க நாடுகளில் குடிஏறியுள்ள இந்தியர்கள் மீது அந்நாட்டினர் வெறுப்படைந்திருப்பதன் காரணம் என்ன?

இந்தியர்கள் வணிகத்துறை மூலம் தங்கள் நாட்டுச் செல்வத்தைச் சுரண்டிச் செல்கின்றனர் என்ற எண்ணம் ஆப்பிரிக்க நாடுகளிலே பலமாகப் பதிந்துவிட்டிருப்பது முக்கியமான காரணம். இந்திய முதலாளிகள் ஆப்பிரிக்க மக்களைத் தாழ்வாகக் கருதுவதாகவும் கூறப்படுகிறது. ஆப்பிரிக்க நாடுகளுக்குப் போய்வந்த என் நண்பரொருவர்—பத்திரிகை நிருபர்—இந்தியர்களால் — குஜராத்திகளால் — நடத்தபபடும் பள்ளிக்கூடத்தில் ஆப்பிரிக்கர்களைச் சேர்த்துக்கொள்ள மறுப்பதாகச் சொன்னார். இப்படிப்பட்ட 'ஏகாதிபத்தி'யப்போக்கு இருக்குமானால், ஆப்பிரிக்க மக்கள் தமது நாட்டில் பிழைக்கமட்டுமல்ல, 'சுரண்ட'வந்த இந்தியர்கள்மீது வெறுப்பு அடையாமலிருக்க முடியுமா!

(3) உணவு அமைச்சர் சுப்பிரமணியத்தின் நிலை ஜெய்ப்பூர் காங்கிரசில் இரங்கத்தக்கதுதானே?

மெள்ளக் கேட்கிறீரே! கிடைத்த சந்தர்ப்பத்தை காமராஜர் நன்கு பயனபடுத்திக் கொண்டிருக்கிறார்; இதுதான் சமயமென்று தாரகேசுவரி அம்மையாரும் கொஞ்சம் 'எம்பி'ப் பார்த்துவிட்டார்! அதோடு விஷயம் முடியவில்லை—தமிழ் நாட்டின் மீது கொண்டுள்ள துவேஷத்தை சிறப்பான அளவில் உணவு அமைச்சர்மீது காட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் அவரது நிலையும் பரிதாபத்துக் குரியதுதான்! காரணம், அண்மையில் சுப்பிரமணியம் அமெரிக்கா சென்று, அவசர உதவி என்ற பேரால் ஆயிரமாயிரம் டன் உணவுத் தானியங்களின் இறக்குமதிக்காக—சில இலட்சியங்களை விட்டுக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறார்—இந்திய உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கென உர உற்பத்தி, விற்பனை உரிமையை அமெரிக்காவுக்கு அளித்ததுடன், அதன், விலையை அவர்களே நிர்ணயித்துக் கொள்ளவும் ஒப்புக்கொண்டு ஒப்பந்தம் செய்துகொண்டு வந்து விட்டதுதான்!

ஆனால் அவர் நினைத்தது ஒன்று—நடந்தது ஒன்று. இந்த ஒப்பந்தத்தின் எதிரொலிதானோ என்னவோ—ஆசியாக் கண்டம் முழுவதும் — இந்தியாவில் கடும் பஞ்சம் நிலவிக்கொண்டிருப்பதாகவும் அடுத்த சில திங்களில், கோடிக்கணக்கான பேர் பட்டினிச் சாவுக்குப பலியாகும் நிலை ஏற்படவிருக்கிறதென்ற கருத்தும் பரவலாக இருக்கிறது. அதனால் ஐ.நா.காரியதரிசி ஊதாண்டு முதல், வாடிகன் நகரத்து போப்பாண்டவர் வரை இந்தியாவுக்கு உடனே உதவுங்கள் என்று வேண்டுகோள் விடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

(4) தமிழ் நாட்டில் தேசியப் பாதுகாப்பு நிதிக்கென வசூலான தொகை எவ்வளவு?

1,47,48,566 ரூபாய்களென அண்மையில் அறிவித்துள்ளார்கள். தங்கம் வசூலும், தங்கப் பத்திர முதலீடும் இதில் சேரவில்லை!

(5) பழநி கோயிலுக்கு, திருப்பதி தேவஸ்தானம் 1500 தோலா தங்கம் (கடனாகத்) தரமுடியாது என்று மறுத்துவிட்டதே!

இந்தியத் துணைக்கண்டம் பூராவும் தமிழ் நாடாக இருக்கவில்லையே என்று நீர் நினைக்கிறீர்—என்ன செயவது?

(6) ஜெய்ப்பூர் மாநாடு, காங்கிரஸ் கட்சியின் சொந்த விவகாரமல்லவா!

உண்மைதான்! அந்த சொந்த விவகாரங்கள்தான் இந்திய சர்க்காரின் விவகாரங்களாக உயிர்பபெறுகின்றன என்பது நமக்குத் தெரியாமலிருக்கிற வரையில், அது பற்றிக் கருத்தறிவிக்கக் கூடாதுதான்! இந்த மந்திரி, இந்தக் கொள்கையைக் கைவிட வேண்டும், அந்த மந்திரியைப் பதவியை விட்டு விலக்கவேண்டும், என்று காங்கிரஸ் மாநாட்டில் பேசிககொள்ளும் சொந்த விவகாரத்தில், நம அனைவரது 'தலை விதி'யும் அல்லவா சேர்த்துக்கொள்ளப் பட்டிருக்கிறது?

(7) கொடிவாரம் பற்றி எங்களுக்கு என்ன சொல்லுகிறீர்கள்?

கழகப் பொருளாளர் பத்து லட்சம் ரூபாய்கள், தேர்தல் செலவுக்குத் தேவையெனக் கூறிவிட்டாரே!காமராசர், தன்கட்சித் தேர்தல் செலவுக்கு 18 லட்ச ரூபாய் திரட்டிவிட்டிருக்கிறார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது—தெரியாமலிருப்பது எவ்வளவோ! நீயும், மற்றவர்களும் நாலணா, எட்டணா கொடுத்து நம் கழகக் கொடியை பெரிய அளவுக்கு வாங்குவதன் மூலம் தான் பொருளாளரின் வேண்டுகோளை நிறைவேற்ற முடியும். அப்போதுதான் 67 தேர்தலை நாம் உள்ளத் திண்மையுடன் சந்திக்க முடியும்!

(8) 1967 - ல் தி. மு. க. ஆட்சி அமைக்கவிடாமல், முழுமூச்சுடன் எதிர்க்கப் போவதாக மணலி கந்தசாமி பேசி இருக்கிறாரே தெரியுமா?

அவரது பேச்சில் அவரையும் அறியாமல் ஒரு உண்மையை ஒப்புக்கொண்டிருக்கிறார் என்பது உனக்குத்தெரிகிறதா இல்லையா? 1967-ல் நாம்தான் ஆட்சி அமைக்கப்போகிறோம் என்று சொல்லி இருக்கிறார்! அதோடு கொஞ்சம் அங்கலாய்ப்பு! அவ்வளவுதானே!

காஞ்சி

மலர் 2 20—2—66 இதழ் 30

அந்த நாள்-
இந்த நாள்!

பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக்கழகம் மேற்கொள்ளவேண்டிய போக்கு என்ன? முறையாது? என்பனபற்றி அரசியல் வட்டாரத்தினரில் பலரும் கவனம் செலுத்திக் கருத்தளித்திருப்பது வரவேற்கத் தக்கது.

ஜனநாயகத்தின் எதிர்காலம்பற்றிய சீரியசிந்தனையும் அக்கறையுமே பலரை இந்தத் துறைபற்றிப் பொதுவாகவும், கழகம்பற்றிக் குறிப்பாகவும் சிந்திக்கச் செய்திருக்கிறது.

இதிலிருந்து, கழகம் பலருடைய கவனத்தையும் ஈர்த்திடும் வடிவமும் வலிவும் பெற்றுவிட்டிருக்கிறது என்று கூறிப் பெருமைப்பட்டுக்கொள்ள விரும்பவில்லை; பலரும் ஜனநாயகம் செம்மைப்படுத்தப்பட வேண்டும், அதற்குக் கழகத்தின் போக்கு துணையாக அமையவேண்டும் என்ற மெய்யுணர்வு பெற்றிருக்கிறார்களே என்பதை எண்ணியே பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலுக்காக 'உற்பத்தி' செய்யப்பட்ட கட்சி அல்ல; தேர்தலிலே ஈடுபடுவது அது ஏற்றுக்கொண்டுள்ள பொறுப்புகளிலே ஒன்று. முக்கியமானது என்றபோதிலும், கழகம் மக்களிடம் பல்வேறு வகையாலும் பணியாற்றி ஜனநாயக உணர்வை ஊட்டுவதனைத் தன் தலையாய கடமையாகக் கொண்டு இயங்கி வருவதாகும்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், மிகமிகச் சாமான்யர்களால் துவக்கப்பட்டு, இடர்ப்பாடுகளுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம்.

மழை மட்டுமல்ல, மருட்சியும் தயக்கமும் கொட்டிடும் நிலை, சென்னையில் ஓர் வெட்டவெளியில் கழகம் துவக்கப்பட்டபோது. இது இன்று, நாட்டு அரசியலில் புதுவடிவம் கண்டிடச் செய்திடும் அளவு வளர்ச்சி பெற்றிருப்பதனைப் பலரும் உணருவது காணும்போது, பட்டபாடு வீண் போகவில்லை என்ற மகிழ்ச்சி கலந்த எழுச்சி ஏற்படாமலிருக்க முடியாது. இந்த வளர்ச்சிக்காக அரும்பணியாற்றிடுவோர் அனைவரும் பெருமிதம் கொண்டிடத்தான் செய்வர்.

அகமகிழ்ச்சியும் பெருமித உணர்ச்சியும் மிகுந்திடும் வேளையில் நாம் 'அந்த நாள்' பற்றிய நினைப்பை இழந்துவிடக்கூடாது; இழந்திடின் இதயத் துடிப்பின் இயல்பினை அறிந்திடத் தெரியாத மருத்துவர் எனும் ஏளன நிலைபெறுவோம்.

அந்த நாள்! அல்லல் நிரம்பிய நாள்! அருவருப்பை வெளிப்படையாகப் பலரும் உமிழ்ந்த நாள்! அச்சமும் அய்யப்பாடும் மனதைப் பிய்த்துத் தின்ற நாள்! என்ன கட்சி! என்ன கட்சி!! என்று கேட்டுக் கேட்டு ஏளனச் சிரிப்பொலியை 'ஏற்கனவே ஏற்றம் பெற்றோர்' கிளப்பிய நாள்! அந்த நாள்! ஆபத்துக்களை அடுக்கடுக்காக எதிர்பார்த்தவண்ணம் இருந்திட்ட நாள்! ஒட்டிய வயிறினர், காய்ந்த தலையினர், ஏனோதானோக்கள், எச்சிற்கலையங்கள், இதுகள் ஒரு கட்சி நடத்திட முனையும் விந்தையினைக் காணீர்! என்று பேழை உடையார் ஏளனம் பேசிய நாள்! பாராளுமன்றம் அல்ல, பஞ்சாயத்துப்போர்டுகளே, நாம் எட்ட நின்று மட்டுமே பார்த்திடத்தக்கன என்ற நினைப்பினை நாமே கொண்டிருந்த நாள்! அந்த நாள் நினைவிலே இருந்தால் மட்டுமே இந்த நாளின் இயல்பு புரியும்; இதனினும் ஏற்றமளித்திடும் பொன்னாள் பெற்றிட வழி அமைத்தளித்திடும்.

'அந்த நாள்' பற்றிய நினைவினை நாம் இழந்திடாதிருப்பதனாலேயே இந்த நாளில் இந்தக்கழகம் பொதுத் தேர்தலில் என்ன போக்கினை மேற்கொள்ளும் என்று பலரும் கேட்டிடுவது, இசை என இனிப்பளிக்கிறது. வாட் போர்ப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றாகிவிட்டது; இனி இவன் படையினில் முன்னணி நின்றிடும் உரிமை பெறுகிறான் என்ற நிலை கிடைத்திடும்போது ஆற்றல் மறவன் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளிடுமன்றோ! அந்நிலை பெறுகிறோம்!! ஆயினும் 'அந்தநாள்' நமது நினைவினிலிருந்து மறைந்திடின், 'இந்த நாள்' நிலையே நமக்குத் துவக்க நாள் முதல் உள்ளது என்று தவறான கணக்கு புனைந்திடின், வீழ்ந்தோம் என்று! நாம் வீழ்வதுமட்டுமல்ல, ஜனநாயகத்தையும் வீழ்த்துகிறோம் என்று பொருள்.

இந்தப் பொருப்புணர்ச்சியுடனேயே, கழகம் குறித்து அரசியல் தலைவர்களும், இதழாசியர்களும் கூறிடும் கருத்துக்களைக் கூர்ந்து கவனித்துப் பார்த்து, பயன்பெற விழைகிறோம்.

நம்மையும் நம்மிடம் நல்லெண்ணத் தொடர்பு கொண்டிட விழைவோரையும் பிணைத்திடுவது, நடைபெற்றுக்கொண்டுவரும் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தி, நல்லாட்சி அமைத்திடவேண்டும் என்ற கருத்து.

நல்லாட்சியின் இயல்புக்கேற்ற நடவடிக்கைகள் யாவை. முறைகள் எங்ஙனம் இருத்தல்வேண்டும் என்பனபற்றி கூடிக் கலந்துபேசி ஒரு மித்த கருத்துக்கு வந்த பிறகு ஏற்பட்டதல்ல, இந்தப் பிணைப்பு எதேச்சாதிகாரத்தை வீழ்த்துவது, என்ற உணர்வு மட்டுமே நம்மை காங்கிரசல்லாத பிறகட்சிகளுடன்பிணைத்திருக்கிறது.

எதேச்சாதிகாரத்தை எதிர்க்கும் முயற்சியில், பற்பல அமைப்புகள் பெரிதும் தனித் தனியான முறைகளுடன் பணியாற்றிக்கொண்டு வருகின்றன. இயல்புகள், வசதிகள், வாய்ப்புகள், நடவடிக்கைகள், ஒவ்வொரு விதமாக இருந்து வருகின்றன.

ஒவ்வோர் அமைப்பும் அதனதன் இயல்பின்படி, வசதியின்படி நடந்தே இந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளன. இயல்பை இழந்துவிடுவது அல்லது இயல்பிலேயே ஒரு மாற்றம் காண்பது, பெற்ற வளர்ச்சியையே பாழடித்துக்கொள்வதாக முடிந்திடக்கூடும்.

எதேச்சாதிகாரத்துக்கு எதிராக அணிவகுப்பு திரட்டுவது, பாசறைகள் அமைப்பது, படைக்கலன்

(13-ம் பக்கம் பார்க்க)

பனிரண்டாம் பகுதி

புரியாத பேச்சு

"சிலம்பு என்ன செய்தி? ஏன் இப்படி ஓடிவருகிருய்?" என்று மேல்மூச்சு வாங்க ஓடிவந்த சிலம் புத்தாயைப் பார்த்து, காஞ்சன மாலை கேட்டாள்.

'அரசர்! அரசர்!' என்று திக்கு முக்காடிக்கொண்டே கூறிவிட்டு, இளவரசியின் கையைப்பிடித்து இழுத்தாள் — வெளியில் போய்விட லாம் வா விரைவில் என்ற பாவனை யில்!

"அப்பா வந்துவிட்டாரா!" என்று கேட்டுக்கொண்டே, சிறைக் கம்பி களைப் பிடித்தபடி குழம்பிய மன தோடு நின்றிருந்த குலசேகரனைத் திரும்பிப்பார்த்தாள்.

சிறையில் ஒரே இருள் மூடி யிருந்ததினுலும், தீப்பந்தத்தை தூர மாக எடுத்து வந்துவிட்டதாலும், குலசேகரனின் உருவம் ஒன்றும் அவளுக்குத் தெரியவில்லை. ஆனுல் அவன்விட்ட மூச்சின் சத்தம் மட்டும் அவளுக்குக் கேட்டது.

"வெள்ளம் தலைக்குமேலே போய் விட்டது அம்மா—வேகமாக வாருங் கள்--தப்ப முடிகிறதா என்று பார்ப் போம்!" என்று சிலம்பு அவசரப் படுத்தினுள்.

"எதற்காக இப்படிப் பயமும் பதட்டமும் கொள்கிருய்?" அப்பா வந்துவிட்டார்--அவ்வளவுதானே!"

"ஆமாம் அம்மா ஆமாம்! அவர் வந்ததும் வராததுமாகத் தங்களைப் பார்க்கத்தானே, அந்தப்புரத்திற்கு விரைந்து வருவார்? ஆசையோடு அவர் அங்கே வரும்போது, தாங் கள் அங்கே இல்லை என்ருல்?"

"அதனுல் என்னடி, நீயும் நானும் நந்தவனத்தில் உலவிக்கொண்டிருக் கிருேம் என்று எண்ணிக்கொள் கிருர்?"

"இப்பொழுது தாங்கள் எந்த உலகத்தில் இருக்கிறீர்கள் அம்மா? சுய நினைவோடுதான் பேசுகிறீர் களா அல்லது......"

"சிலம்பு?"

"ஆமாம் இளவரசியாரே! இரவு இவ்வளவு நேரத்திலா, நிலவு இல்

கே.ஜி. இராதாமணாளன்

லாத இந்த இருண்ட வேளையிலா, யாராவது நந்தவனத்தில் உலவுவார் கள்? அந்தப்புரத்தில் ஆசை மகள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருப் பாள் — அவளது அழகு முகத்தை ஒருமுறை பார்த்தால் போதுமே — பிரயாணத்தால் ஏற்பட்ட சிரமமெல் லாம் காற்றுப் பறந்துவிடுமே என்ற எண்ணத்தோடு, வேகமாக வருபவரின் கண்கள், தங்களை அங்கே காணமுடியவில்லை என்ருல் ......"

"ஆமாம் சிலம்பு, அப்பா மிகவும் ஏமாற்றமடைந்துவிடுவார்! ஏமாற்ற மடையும் நேரங்களில்தான் — அவ ருக்குக் கோபங்கூட அதிகமாக வருவது வழக்கம்!"

"சரி புறப்படுங்கள்—நாம் போய் விடலாம்!"

'கொஞ்சம் இரு சிலம்பு, கடைசி முறையாக இவனைக் கேட்டுவிட்டு வந்துவிடுகிறேன்!"

"இந்த வீண் வேலை நமக்கு எதற்கு, இவனே மகாகர்வியாக இருக்கிருன்!"

"கடைசியாக ஒரே ஒருமுறை கேட்டுவிடுவது—பிழைக்க விருப்ப மிருந்தால் பிழைக்கட்டும், இல்லா விட்டால் இந்தச் சிறையிலேயே சாகட்டுமே — நமக்கென்ன?" என்று சொல்லிக்கொண்டே தன் கையிலிருந்த தீபபந்தத்தைச் சிலம் பினிடம் தந்தாள்.

சிலம்பு முன்பும் காஞ்சனு பின்பு மாகத் திரும்பவும் அவர்கள், குல சேகரனின் எதிரில் வந்து நின் றனர்.

'இந்தா இப்படிப்பார், உன்னிடம் இனி அதிக நேரம் பேசமுடியாது, அரசர் திரும்பிவிட்டார்!.....' என்று இளவரசி சொல்லிக்கொண்டிருக் கையிலேயே, 'நான் செவிடன் அல்ல. நீங்கள் பேசிக்கொண்டது, எனக்கு நன்ருகக் கேட்டது!' என்று இடைமறித்து அவன் கூறி ஞன்;

சிலம்பினிடமிருந்த தீப்பந்தத்தை இளவரசி வாங்கிக்கொண்டு, 'அப்பா மிகவும் பொல்லாதவர்!' என்ருள்.

(9-ம் பக்கம் பார்க்க)

தம்பி

வெள்ளை மாளிகையில்! (3)

அடிமை வேலைக்காகவே ஆண்டவனல் படைப்பிக்கப்பட்ட இனம் நீக்ரோக்கள் என்று நிறவெறியர்கள் எண்ணிகொண்டனர் என்றபோதிலும், உழைத்து உழைத்து அவர்கள் எல்லாத துறைகளிலும் வெள்ளையருடன் சரிசமமாக நிற்கமுடியும் என்பதை மெய்ப்பித்துக் கொண்டு வந்தனர்.

"மகனே! நீ ஒரு நீக்ரோ! பொருள் என்ன தெரியுமா? ஒவ்வொரு கட்டத்திலும் உனக்குத் திறமை இருக்கிறது என்பதை நிரூபித்துககாட்டிய படி இருக்கவேண்டும். வெள்ளை இனத்தவருக்கு அந்த நிபந்தனை இல்லை! அவர்கள் தகுதியுடன் பிறந்திடும் இனத்தவர்! நாம் தகுதியைப் பெற வேண்டும், உழைப்பால், திறமையால், கல்வியால்"

ஒரு நீக்ரே தன் மகனுக்கு இதுபோல அறிவுரை கூறினர் என்று ஒரு ஏடு தெரிவிக்கிறது அந்த நிலையில இருந்து வந்த இனத்திலே பிறந்த டக்ளஸ் டில்மன், எந்த அமெரிக்கனுக்கும் மதிக்கத்தக்ந பதவியைப் பெற்ருன் என்ருல், அவனுடைய மகன் மட்டற்ற மகிழ்ச்சி அடையத் தானே செய்வான்.

ஜூலியன் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தான்—நீக்ரோக்களுக்காக மட்டும் என்று அமைந்த கல்லூரியில்!

டில்மன், கீர்த்திமிக்க வழக்கறிஞர், செல்வாக்குப்பெற்ற செனட்டர், செனட்சபைக்கே தலைவர், என்ருலும் நீக்ரோவாயிற்றே! ஆகவே டில்மனுடைய மகன் நீகரோக்களுக்காக அமைந்திருந்த கல்லூரியில்தான் இடம்பெற முடிந்தது.

ஜூலியன்! ஜூலியன்! நமது இனத்துக்கே பெருமை! காலமெல்லாம் நமது இனத்தின மீது சுமத்தப்பட்டு வந்த இழிவும் பழியும் ஒரே நொடியில் துடைக்கப்பட்டுவிட்டது!

நமது இனத்தின் தன்மானம் தரணியோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது!

இனி எந்த வெள்ளைப்பயலாவது, கருப்பர் தாழ்ந்த இனம், மிருக இனம் என்று வாய் திறந்து கூறத்துணிவானு!

ஜூலியன்! உன்னேடு சேர்ந்து கல்லூரியில் ஒன்ருகப் படிக்கும் வாய்ப்புபெற்ற நாங்கள் பெரும்பேறு பெற்றவர்கள்! ஜூலியன்! அப்பா நமது இனததின் விடுதலைக்காக முழுமூச்சுடன் பாடுபடுவார் அல்லவா!

ஜூலியன்! நமது இனத்தவரை இன்னமும் இழிவாக நடத்தும் போக்கைக் கண்டவராயிற்றே உன் அப்பா! அவருடைய இரத்தம் கொதிக்குமல்லவா அதை நினைக்கும்போது.

ஒரே வரி! அவருடைய பேனுவிலிருந்து! நமது இனம், சபிக்கப்பட்ட இனம் அல்ல, ஆளும் இனம்!! என்று புது நியதி பிறந்துவிடாதா!



பட்ட கஷ்டத்தை யெல்லாம் மறந்தே விடுவர் நமது இனமக்கள். நாம் பரவாயில்லை; அடிமை வாணிபம் ஆபிரகாம் லின்கனால் அகற்றப்பட்ட பிறகு பிறந்த தலைமுறை. முன்பு? காட்டு மிருகங்களை வேட்டையாடுவதுபோல அல்லவா நமது இனத்தவரை நடத்திவந்தனர் இந்தக் கொடியவர்கள்.

சவுக்காலடிப்பது, சதை பிய்ந்துபோகும் வரையில்! குற்றுயிராக வெட்டவெளியில் போட்டுவைப்பது. மரத்திலே தொங்கவிடுவது சாகடித்து. கேட்கும்போதே நெஞ்சம் வெடித்திடும்! எத்தனை எத்தனைக் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டனர் நமது இனத்தவர்!!

இன்று! எல்லாவற்றுக்கும் ஈடு செய்வதுபோல, செய்த கொடுமைகளுக் கெல்லாம் பரிகாரம் தேடுவதுபோல, மன்னிப்புக் கேட்டுக்கொள்வதுபோல, உன் அப்பாவின் காலடியில், குடிஅரசுத் தலைவர் பதவியைக் காணிக்கையாக வைத்திருக்கிறார்கள்!

வரலாற்றில் இடம் பெறுபவரின் மகன் நீ, ஜூலியன்! உன்னுடைய நண்பர்கள் என்பதைவிட எங்களுக்கு வேறு என்ன சிறப்பு வேண்டும்.

காரிருள் விலகிவிட்டது! கதிரவன் உதித்துவிட்டான்!!

உணர்ச்சி கொந்தளிக்கும் பருவத் தினரல்லவா கல்லூரி மாணவர்கள், வரலாற்று நிகழ்ச்சிகளையும், மக்கள் மனதிலே தோன்றிய எழுச்சிகளையும், உரிமைப் போர் நிகழ்ச்சிகளையும், விடுதலை வீரர்களின் கதைகளையும், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற இலட்சியங்களின் வரலாறுகளையும் படித்துப் படித்து, ஆர்வம் ததும்பும் உள்ளத்தினரல்லவா. ஆகவே, தம்பி! ஒரு நீக்ரோ இனவெறி பிடித்தலையும் அமெரிக்காவில், குடிஅரசுத் தலைவரானசேதி கேட்டதும், துள்ளிக் குதித்துத்தான் இருப்பர்; ஜூலியனிடம் மகிழ்ச்சியுடன் எழுச்சியுடன் ஏதேதோ பேசித்தான் இருப்பர், நண்பர்களின் பேச்சு தேனாக இனித்திருக்கும் அந்த மாணவனுக்கு. அந்த மகிழ்ச்சிப் பெருக்குடன்தான் ஜூலியன் தன் தந்தையிடம் பேசினான் தொலைபேசி மூலம்.

என் தந்தை வெள்ளை மாளிகையில்!

என் தந்தை அமெரிக்கக் குடிஅரசுத் தலைவர்!!

இந்த எண்ணம், அந்த இளைஞன் உள்ளத்தில், ஓராயிரம் நம்பிக்கைகளை ஏற்படுத்தித்தானே இருக்கும்.

நீக்ரோக்களில், கூலிகளாக, வேலைக்காரர்களாக, பாட்டாளிகளாக, அலுவலகங்களிலே பணியாற்றுபவர்களாக இருந்தவர்களால், படிப்படியாக முன்னேறினால் போதும், மனித உரிமைகளை மெள்ள மெள்ளப் பெற்றால் போதும் என்ற விதமாக மட்டுமே நினைத்திட முடிந்தது. மாணவர்கள் மனதில், இந்தப் போக்கா இடம்பெற்றிருக்கும்! மாணவர்கள் ஒரு சமூகத்தின் ஈட்டிமுனைகள்! எழுச்சிப் பிழம்புகள்! நம்மாலே ஆகுமா என்ற இழுப்புப் பேச்சும், என்ன செய்வது என்ற ஏக்கப் பேச்சும், உள்ளத்திலே இருந்திட மறுத்திடும் பருவம்! எந்த இன்னலை ஏற்றுக்கொண்டாகிலும் இழிவுகளைத் துடைத்தாகவேண்டும் என்ற உறுதி குடிகொண்ட உள்ளம் அவர்களுக்கு. ஆகவே கல்லூரிகள், விடுதலைக்கு இளைஞர்களைத் தயாரிக்கும் பாசறைகளாகத்தானே இருக்கமுடியும். எத்தனையோ கொடுங்கோலர்கள் வீழ்த்தப்பட்ட வரலாறுகளைப் படித்தது வீண்போகுமா! எத்தனையோ வல்லமையுடன் அமைக்கப்பட்ட பேரரசுகள், மக்களில் ஒரு பிரிவினரைத் தாழ்வாகவும் மிருகத்தனமாகவும் நடத்தியகாரணத்தால், சமூகத்தில் வெடிப்புகள் தோன்றி, புரட்சிகள் புயலெனக் கிளம்பி, அதன் வேகத்தாலே அழிக்கப்பட்டுப்போயின என்ற வரலாற்று உண்மைகள் இதயத்தில் பதிந்துள்ளனவே; அத்தகையவர்கள் அடிமைத்தளைகள் தன்னாலே விலகிடா, உடைத்தெறியப்படவேண்டும் என்ற உண்மையினைப் பெருமலா இருந்திருப்பர்.

பெரியவர்கள், பொறுமை என்றும் பொறுப்புணர்ச்சி என்றும், சட்டம் என்றும் ஒழுங்கு என்றும், மெள்ள மெள்ள என்றும் படிப்படியாக என்றும் பேசுவது கேட்டுக் கேட்டுக் காது புளித்துப்போய்விட்டது. விடுதலைக்கான முயற்சியில், விளைவுபற்றிக் கவலைப்படாமல், ஆபத்து குறித்துப் பொருட்படுத்தாமல், உடனடியாக ஈடுபட்டாகவேண்டும்! நீண்ட நெடுங்காலமாகப் பொறுத்தாகிவிட்டது! இனியும் பொறுத்துக் கொள்வது முடியாது, கூடாது! மனிதத்தன்மை மாய்க்கப்படுகிறது! உரிமைகள் உண்டுஎன்ற 'உணர்ச்சியே நசுக்கப்பட்டு வருகிறது. எனவே, இப்போதே வீறிட்டுக் கிளம்பவேண்டும், விடுதலைப்போர் தொடங்க வேண்டும். பலாத்காரமான முறையானாலும் சரி, புரட்சியே நடத்தித்தீரவேண்டும் என்றாலும் சரி, அச்சம் கொண்டிடலாகாது! அடிமையாக அஞ்சி அஞ்சி அடிபணிந்துக் கிடப்பதைக் காட்டிலும் விடுதலைக்காகப் போராடி குண்டடிபட்டு, மார்பிலிருந்து குபுகுபுவெனப் பீறிட்டுக்கொண்டு வரும் இரத்தத்தைப் பார்த்தபடி களத்தில் வீழ்ந்துபடுவதே, வீரம்!—என்ற விதமான எண்ணம் அமெரிக்க நீக்ரோக்களில் இளமைத் துடிப்பு உள்ளவர்களிடம் தோன்றிவிட்டது என்பதை எடுத்துக்காட்டுவதுபோல, பல புரட்சிகரமான நடவடிக்கைகள் அமெரிக்காவில் அவ்வப்போது நடைபெற்று வந்தன. அவைகளை அமெரிக்க வெள்ளை அரசு அழித்துவிட்டன என்றாலும், ஒவ்வொரு நடவடிக்கையும் நீக்ரோக்களை இன்னமும் தாழ்வாக நடத்திக் கொடுமைப்படுத்திக்கொண்டு வருவது நடைபெறக் கூடியதல்ல என்ற எச்சரிக்கையாகவே அமைந்தது.

தம்பி! நான் முன்பு குறிப்பிட்டிருந்தேனே 'டிரம்' என்ற கதை, அது கொடுமைக்கு இரையான நீக்ரோ பற்றியது. ஆனால் வெள்ளை நிற வெறியரை எதிர்த்து நின்று, கொல்லப்பட்ட நீக்ரோக்களின் வீரக்காதைகள் நிரம்ப உள்ளன. அந்த வீரக்காவியங்கள் அனைத்திலும், இறுதியில், புரட்சி மூட்டிய நீக்ரோ சுட்டுப் பொசுக்கப்பட்டானென்றோ, வெட்டி வீழ்த்தப்பட்டானென்றோதான் இருக்கும். விடுதலைப்பெற்றார்கள் என்ற முடிவு இருப்பதில்லை! ஆனால் உயிர் அல்ல முக்கியம், உரிமையே உயிரினும் மேலானது என்ற தத்துவத்தை அவர்கள் ஒவ்வொருவரும் தமது இரத்தத்தால் எழுதிவிட்டுப் போயிருக்கிறார்கள்.

கொடுமைகள் குவிக்கப்படும்போது, அதனால் தத்தளிப்பவர்களிடமிருந்து கிளம்பும் சோகம், பெரும் புயலை எழுப்பிவிடும் என்பதனைக் கொடுமைப்படுத்துவோர் உணருவதில்லை. வீழ்த்திவிட்டோம், வீழ்ந்துவிட்டது! என்று எண்ணிக்கொண்டுவிடுகின்றார்கள்; ஆனால் வீழ்ததப்படுபவர்கள், எண்ணற்றவர்களை எழுப்பிவிட்டுத்தான் போகிறார்கள்! தனி மனிதர்களாக

இருப்பவர்கள், தமது உயிரைத் தியாகம் செய்வதன் மூலம் ஒரு அணிவகுப்பைப் பெற்றளித்துவிடுகிறுர்கள். இன்னமுமா இறுமாப்பு! இன்னமுமா எதிர்ப்பு! இவ்வளவு பேர் தூக்கிலே தொங்கிய பிறகுமா, புரட்சி செய்யும் நினைப்பு! என்று வியப்புடன் கேட்பர், கொடுங்கோலர்; ஆனுல் கொடுமையை எதிர்த்துச் சிந்தப்படும் ஒவ்வொருதுளி இரத்தமும் கொடுமையை எதிர்த்திடும் உறுதியை ஓராயிரம் புதியவர்களுக்கு ஊட்டிவிடுகிறது.

ஒட்டி உலர்ந்துபோன உருவம்! உழைத்திட இலாயக்கில்லை என்று எஜமானனுல் எக்கேடோ கெட்டுப்போ என்று ஓட்டிவிடப்பட்டுவிட்டவன் அவன், தன் போன்ற ஓர் அடிமையிடமிருந்து ஒரு குவளை சாராயம் பெற்றுக் கொணடுபோகிருன்; குதிரைகளுக்குத் தரும் மட்டரகமான சாராயத்தை. வெள்ளை முதலாளி பார்த்துவிடுகிருன். கருப்பு அடிமை பதுங்குகிருன். பளார்பளார்! என்று சவுக்கடி விழுகிறது! துடிக்கிருன்! தடுமாறிக் கீழே விழுகிருன்! சவுக்கடி ஓயவில்லை! சவுக்காலடிப்பவன், குதிரை மீது! சவுக்கடிபடுபவன், தரையில்!!

பார்க்கிருர்கள் பலர்; பதறுகிருர்கள், ஆனுல் வாய் திறந்து ஒரு வார்த்தை, ஐயோ! பாவம்! விட்டுவிடுங்கள்! என்று கூறவில்லை. ஏன்? அடிப்பவன் எஜமானன்! வெள்ளை இனம்! துடிப்பவன், அடிமை; நீக்ரோ! பார்ப்பவர்களும் அடிமைகள்; நீக்ரோக்கள். ஐயோ! பாவம்! என்று சொன்னுலோ, போதும் நிறுத்துங்கள் என்று கூறினுலோ, அதே சவுக்கடி விழும் இவர்களுக்கு; இன்லும் வேகமாக. அடி தாளமாட்டாமல் ஓடினுலோ, வேட்டை நாய்களை அவிழ்த்துவிடுவார் எஜமானர்!! எனவே அவர்கள் பார்க்கிருர்கள், தங்கள் இனத்தவன் ஒருவன், தள்ளாடும் வயதினன், சவுக்கடிபடுவதை! எஜமானன் அடிப்பதுடன் விடவில்லை. குப்புறக் கீழே விழுந்தவன் மீது குதிரையை ஏற்றுகிருன்! குற்றுயிராகிருன் அடிமை! கோபம்தீருகிறது எஜமானனுக்கு. மாளிகை செல்கிருன்! இரண்டு நாட்களில் அந்த கருப்பு அடிமை இறந்து போகிருன். மற்ற அடிமைகள் அவனை அடக்கம் செய்கிருர்கள். பிரார்த்தனை செய்யப்படுகிறது!! சட்டம்? அடிமையை என்ன செய்யவும் உரிமை பெற்றவன் எஜமானன்! பயல் செத்துவிட்டான்!! என்று கூறுகிறது, அந்த அடிமை செய்த பல குற்றங்களிலே, சவுக்கடியைத் தாங்கிக்கொள்ள முடியாமல் செத்ததும் ஒன்று என்பதுபோல! இதைக் கண்ட ஒரு கட்டுடல்கொண்ட நீக்ரோ இளைஞன், ஆயிரம் நீக்ரோக்களை இரகசியமாகத் திரட்டிக்கொண்டு, அந்த ஊரையே அழித்து, வெள்ளையர்களைக் கொன்று குவித்து, விடுதலைபெறத் திட்டமிடுகிருன். இந்தப் புரட்சி 1800ம் ஆண்டு, அமெரிக்காவில் நடைபெற்றதை, 'கருப்பு இடி' என்ற ஏடு எடுத்துக் காட்டுகிறது.

ஆயுதம் இல்லை, புரட்சி நடத்திட! பயிற்சி கிடையாது, போர்முறையில்! அடக்கிடப் பலமானபட்டாளம் வெள்ளை அரசிடம் இருப்பதும் தெரியும். பிடிபட்டுவிட்டால் தீர்த்துக் கட்டிவிடுவார்கள் என்பதும் புரிகிறது. ஆனுலும்எத்தனைக் காலத்திற்குத்தான் பொறுத்துக்கொண்டிருப்பது! கண் எதிரே சவுக்காலடித்துச் சித்திரவதை செய்கிருன், பார்த்துக்கொண்டுதானே இருக்க முடிகிறது! செத்தானே அந்தக் கிழவன், புரட்சியா செய்தான்? இல்லையே! அடங்கி ஒடுங்கிக் கிடந்தான்! சவுக்கடி விழ விழத் துடித்தான்; எதிர்த்தானு? இல்லையே! ஏன் என்று கேட்டானு இல்லையே! வாய்

இந்த வாரம்-
வெளி நாட்டில்.....

வாஷிங்டன், பிப். 9—வியட்நாம் போரை நீடித்து நடத்துவதற்கு 480 கோடி டாலர் மானியம் தர யு. எஸ். செனட் அங்கிகாரம் அளித்தது.

பேர்லின், பிப். 10—சீனப் பகுதிகளில் ரஷ்ய விமானங்கள் வேவு பார்க்கின்றன. ரஷ்ய-சீன எல்லைகளில் சீனத்துருப்புகள் குவிக்கப்படுவதால் ரஷ்யா, வெளி மங்கோலியாவில் ராணுவ பலத்தை அதிகரித்திருப்பதுடன், ராணுவப் பயிற்சி அதிக அளவுக்கும் தரப்படுகின்றது.

நைரோபி, பிப். 11—உணவு உடை, உறையுள், வைத்திய வசதி முதலான அடிப்படைத் தேவைகள்கூட கிடைக்கமுடியாத நிலையில் நாடு இருக்கும்போது நகரசபைத் தலைவருக்கு 10,850பவுன்கள் பெறுமானமுள்ளஆடம்பரக் கார் கூடாது என்று கிளர்ச்சி செய்யப்பட்டது.

சாலிஸ்பரி, பிப். 10—ரொடிஷியாவின் சுதந்திரத்தை நசுக்கிவிட வேண்டும் என்று பிரிட்டன் நடத்தும் போராட்டத்திலும், பொருளாதார பகிஷ்கார யுத்தத்திலும் தான் வெற்றிபெற்று வருவதாக ரொடிஷியப் பிரதமர் இவான் ஸ்மித் அறிவித்துள்ளார்.

ஹாங்காங், பிப். 11—சீனுவுக்கு விரோதமாக ஒரு ஐக்கிய முன்னணியை அமைப்பதற்கு அமெரிக்காவுடன், ருஷியா கூட்டுச் சேர்ந்திருப்பதாகவும், அண்மையில் லால்பகதூரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள இங்குவந்த ஹம்ப்ரேயுடன், கோசிஜின் ஒப்பந்தம் செய்துகொண்டார் என்றும் 'செங்கொடி' என்ற சீன கம்யூனிஸ்ட் ஏடொன்று கூறியுள்ளது.

பாரிஸ், பிப். 12—மொராக்கோ இடதுசாரி கட்சித் தலைவரான பென்பெர்க்கா கொலை தொடர்பாக, முன்கூட்டியே தகவல் தெரிந்திருந்தும் நடவடிக்கை எடுக்கத் தவறியதற்காக பிரஞ்சு உளவிலாகா அதிகாரி மார்ஸெஸ் லெராய் என்பவர் கைது செய்யப்பட்டார். இதற்கு முன் பிரெஞ்சு உளவு ஏஜெண்ட் அண்டாயின் லோபஸ் என்பவரும் இதுதொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரசெல்ஸ், பிப். 10—மருத்துவக் கொள்கையில் ஏற்பட்ட தகராறு காரணமாக பெல்ஜியம் கூட்டு சர்க்கார், ராஜினுமா செய்தது.

ரோம், பிப். 15—இந்தியாவில் பசியால் வாடுவோரின் உதவிக்காக இத்தாலியில் இதுவரை 61·33 இலட்சம் நன்கொடை திரட்டியிருக்கிறுர்கள்.

பாரிஸ், பிப். 15—எகிப்திய அதிபர் நாசரைக் கவிழ்க்க நடந்த சதியில் செஞ்சீனு தொடர்பு கொண்டிருக்கிற தென்பதற்கும், இதற்காக ரூ. ஒரு லட்சம் வரை எகிப்திய கம்யூனிஸ்ட் ஒருவருக்கு உதவியாக சீனு அளித்துள்ளது என்பதற்கும் ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

சைகோன், பிப். 17—தென் வியட்நாமில் பயங்கரமானகடற்போர் நடைபெற்றுள்ளது. ரோந்து சென்றுகொண்டிருந்த அமெரிக்க இயந்திரப் படகொன்றை 'கடல்கன்னி' வெடிகொண்டு தாக்கியுள்ளனர்.

திறக்கவே இல்லை! கண்ணீர் வடித்தான்! முடிவு? புதைத்துவிட்டார்கள்! புரட்சி செய்து பிடிபட்டால் சாக வேண்டும்! சரி! புரட்சி செய்யாதிருந்தால் மட்டும் வாழ்கிறோமா! இது ஒரு வாழ்வா! எந்த நேரத்திலும் சவுக்கடி விழலாம், எந்தச் சமயத்திலும் குதிரையை விட்டு மிதிப்பார்கள், குற்றுயிராக்குவார்கள், பிறகு கர்த்தரிடம் சேர்ப்பிப்பார்கள்!! ஜெபம் நடத்துவார்கள்! இது ஒரு வாழ்வா! இதைவிட எதிர்ப்போம், வெற்றி பெற்றால் விடுதலை! இல்லையானால் வீரமரணம்!

இவ்விதம் கூறுகிறான் 'கருப்பு இடி' என்ற காவியத் தலைவன் கேப்ரியல்; சரி என்று இசைகின்றனர், ஆயிரம் அடிமைகள். ஊரை வளைத்துப் பிடித்துக் கொள்ள திட்டம் வகுக்கிறான். திட்டம் வெற்றி பெறவில்லை. பெருமழை, அவன் திட்டத்தை நாசமாக்கி விடுகிறது. பிடிபடுகின்றனர் பலர். கேபிரியலும் வேறு சில தளபதிகளும் தப்பி ஓடுகின்றனர், காட்டுப்புறம். படை வருகிறது! வெள்ளையரின் இதழ்கள் 'கருப்பு அபாயம்' பற்றிப் பொறி பறக்க எழுதுகின்றன. கேபிரியல் பிடிபடுகிறான். பிடிபடுகிறான் என்றுகூடச் சொல்வதற்கில்லை! தானே தன்னை ஒப்படைக்கிறான்! சரண் அடையவில்லை. அந்தச் சம்பவமும் கேபிரியலின் வீரத்தை விளக்குவதாகவே அமைகிறது. கேபிரியல் தப்பிச் செல்வதற்காக ஒரு படகு தயாராகிறது. ஆனால் கடைசி நேரத்தில், அவனுக்குத் துணை செய்ய முன்வந்தவன் பிடிபடுகிறான். போலீஸ் அவனை வளைத்துப் பிடித்துக்கொண்டு எங்கே கேபிரியல்? என்று கேட்கிறார்கள்; அவன் தனக்கு ஏதும் தெரியாது என்று மறுக்கிறான்; கொடுமைப்படுத்துகிறார்கள் போலீஸ் படையினர்; தனக்காகத் தன் நண்பன் இம்சைக்கு ஆளாவது கண்டு தாங்காத கேபிரியல், போலீசிடம் நிற்கிறான், "இதோ நான்தான் கேபிரியல்! விடுங்கள் அவனை! என்னைக் கைது செய்து கொள்ளுங்கள்" என்று கூறுகிறான்.

தம்பி! 'கருப்பு இடி' என்ற அந்த நூலிலே கூறப்பட்டிருப்பது அவ்வளவும் கற்பனை அல்ல, வரலாற்று நிகழ்ச்சி. வடிவம், கதையாக்கப்பட்டிருக்கிறது; அதற்கேற்ற சம்பவக் கோர்வைகள்; உரையாடல்கள் தரப்பட்டுள்ளன; ஆனால் ஒரு நீக்ரோ புரட்சி ஏற்பட்டதும்; கேபிரியல் போன்ற நீக்ரோ தலைவர்கள் பிடிபட்டுக் கொல்லப்பட்டதும் உண்மைச் சம்பவங்கள்.

கடைசிக் கட்டம் உண்மையிலேயே கல் மனதையும் கரைத்துவிடும்.

கேபிரியல் தூக்கிலே தொங்குகிறான், கலங்காமல்; தாள் பணிய மறுத்து.

அந்தப் புரட்சியில் அவனுடன் துணிந்து ஈடுபட்டு ஆபத்துக்களைத் துச்சமென்று கருதிப் பணியாற்றிய அவனுடைய காதலி—நீக்ரோ பெண்மணி—வெள்ளை வெறியரிடம் சிக்கி அடிமையாக விற்கப்படுகிறாள்.

இதைக் காணுகிறான், கதையின் துவக்கத்தில் சவுக்கடி கொடுக்கப்பட்டு ஒரு நீக்ரோ இறந்தானே, அதைப் பார்த்த, மற்றோர் நீக்ரோ!

அந்த நீக்ரோவும் கேபிரியலின் புரட்சியிலே ஈடுபட்டவன்தான்! இடையிலே அச்சம் அவனைப் பிடித்தாட்டிற்று; அவன்தான் புரட்சித் தலைவர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டான்.

'கருப்பு இடி'யில் கூறப்பட்டுள்ளது போன்ற புரட்சிகள் பலப் பல அவ்வப்போது வெடித்துக் கிளம்பியபடி இருந்தன.

தம்பி! இதுபற்றி இங்குக் குறிப்பிடுவதற்குக் காரணம், நீக்ரோக்கள் தங்கள் விடுதலைக்காக நடத்திடும் கிளர்ச்சியை அமெரிக்க வெள்ளை அரசு ஒழித்துக் கட்டுவதற்குக் கையாண்ட ஒரு முறை, அந்தக் கிளர்ச்சியை, 'அன்னியர்கள்' அமெரிக்காவுக்கு எதிராகத் தூண்டிவிட்டிருக்கிறார்கள் என்ற பழி சுமத்தி, அமெரிக்க மக்களின் ஆத்திர உணர்ச்சியைத் தட்டி எழுப்புவது என்பதைக் குறிப்பிடத்தான்.

> இந்தி மொழி ஆதிக்கம் தங்கள் எதிர் காலத்தை நாசமாக்கும் என்று உணர்ந்து கொதித்து எழுந்த மாணவர்களை, நாம் தூண்டிவிட்டு கலாம் விளைவித்தோம் என்று முதலமைச்சர் பக்தவத்சலம் கூறினாரல்லவா! இதே முறையைக் கையாண்டனர்; முன்பு; அமெரிக்காவில்.

'கருப்பு இடி' என்ற நூலிலே, புரட்சித் தலைவன் கேபிரியல் தான்தான் புரட்சி நடத்தியவன் என்று சொன்ன பிறகும் விசாரணை நடத்திய நீதிபதிகள் விடவில்லை.

> உனக்கு எப்படி இவ்வளவு திட்டமிடத் தெரிந்தது? நீயோ அடிமை! உனக்கு எங்கிருந்துஇத்தனைச் துணிவுபிறந்தது.

> உண்மையைச் சொல். புரட்சியைத் தூண்டிவிட்டவர் யார்? சொல்லிவிடு! உன் மீது குற்றம் இல்லை. நீ பாவம், யாரோ ஆட்டுவித்தபடி ஆடிவிட்டாய். சூத்ரதாரிகளைக் கூறிவிடு. தப்பித்துக் கொள்ளலாம்.

என்றெல்லாம் கேட்கிறார்கள்.

> ஒருவரும் தூண்டிவிடவுமில்லை, துணைக்கு வரவுமில்லை; திட்டமிடவுமில்லை. நானேதான் திட்டமிட்டேன். அன்று மட்டும் பெருமழை வாராதிருந்திருப்பின் என் திட்டம் வெற்றியும் பெற்றிருக்கும்.

என்று கேபிரியல் சொல்லுகிறான், நம்பிக்கை ஏற்படவில்லை! நீதிபதிகளுக்கு; ஏனென்றால் (1800) அன்றைய அமெரிக்காவில் கிளர்ச்சிகளை, புரட்சிகளை மூட்டிவிடுபவர்கள் பிரன்ச்சுக்காரர்கள் என்ற எண்ணம் பலமாக இருந்து வந்தது. பிரன்ச்சுப் புரட்சியின்போது மலர்ந்த கருத்துகள் சமத்துவம் என்பது! நீக்ரோக்கள் சமத்துவம் அல்லவா கேட்கிறார்கள்! அவர்களுக்கு எப்படித் தெரியும் சமத்துவம் என்பது; பிரன்ச்சு நாட்டு புரட்சிக்காரர்கள் தூண்டிவிட்டதால் தெரிந்தது! ஆகவே நீக்ரோ கேபிரியல் நடத்திய புரட்சி பிரன்ச்சுக்காரர் மூட்டிவிட்டது! இது அமெரிக்கா நிறவெறியர் வாதம்.

காக்கை கருப்பு நிறம்
கந்தசாமி நிறம் கருப்பு
ஆகவே
கந்தசாமி காக்கை!!

இப்படி ஒரு வாதம்! அந்த நாள் அமெரிக்காவில்தானே என்று கேட்கின்றாயா தம்பி! ஏன், இந்த நாள் பக்தவத்சலனார் வேறுவிதமாக வாதம் செய்கிறார்.

இந்தி ஒழிக என்கிறது தி. மு. க.
மாணவர்கள் இந்தி ஒழிக என்கிறார்கள்
ஆகவே
மாணவர்கள், தி. மு. க!

(14-ம் பக்கம் பார்க்க)

4-ம் பக்கத் தொடர்ச்சி

'அப்படியா?'

'ஆமாம், சிறைத் தண்டனையை அதிகமாககினாலும் ஆக்கிவிடுவார், அல்லது தூக்குத் தண்டனையே கொடுத்தாலும் கொடுத்துவிடுவார்'

'ஓகோ! அரசர் அவ்வளவு பெரிய கொடுங்கோலரா? கெட்டவர்களுக்குத்தான், நல்ல மக்கள் பிறப்பார்கள் என்று நான் சொல்லக் கேட்டிருக்கிறேன்!'

'நாவை அதிகம் நீட்டாதே!'

'ஏன் நீட்டினால், தேன்கூட்டையே எட்டிவிடும் என்ற அச்சமா?'

'இப்பொழுது நீ யாரிடம் பேசுகிறாய்?'

'நன்றாகத் தெரியும் — தெரிந்துதான் பேசுகிறேன்! கோலமயில் நடையாள், கொஞ்சுமொழிக கிளியாள்—கொங்கு நாட்டு இளவரசி—காஞ்சனமாலையோடு பேசுகிறேன்!'

'உதவி செய்ய வந்தவளிடத்தில், நீ ஏதேதோ உளறுகிறாய்! அய்யோ பாவம் என்று எண்ணியதற்கு, நீ ஆகாயத்தையே தொட்டுப் பார்க்கத் துணிகிறாய்!'

'ஆகாயம் இருக்கிறதே, அது வேளைக்கு ஒருவிதமாக வர்ணமாயங்களைக் காட்டும்! அந்த வசீகரத்திலே தன் நிலையை மறந்த தும்பி, அதைத் தொட்டுப்பார்த்துக் கட்டிப் பிடித்துவிட வேண்டுமென்ற துடிப்பினால், பறக்குமாம் உயர உயர! தும்பியின் தகாத ஆசையையும் முயற்சியையும் கண்டு, யாரும் ஆச்சரியப்படுவதோ சிரிப்பதோ இல்லை! ஆனால் தும்பியைக் காண்பதற்காக, ஆகாயமே கீழே இறங்கி வருகிறது என்றால்......'

குலசேகரன் வார்த்தையை முடிக்காமலேயே, அந்த வடிவழகியைக் குறும்போடு பார்த்து, குறுநகை செய்தான்.

'கேட்டீர்களாம்மா, கதையை? திண்ணைமீது உட்கார்ந்து, எவனோ 'பசி! பசி!' என்று அழுது துடித்தானாம்! எவளோ கொஞ்சம் இரக்கமான மனங்கொண்டவள், அய்யோ பாவம் என்று பச்சாதாபப்பட்டு, சோறு கொண்டுவந்து போட்டாளாம்! அதைச் சாப்பிட்டுவிட்டு, 'இரக்கமான மனங்கொண்ட அம்மையே, பசித்த வயிற்றிற்குச் சோறு தந்தாயே! வலிக்கும் காலையும் கொஞ்ச நேரம் பிடித்துவிட்டுப்போயேன்!' என்று சொன்னானாம்! அந்த நன்றி கெட்டவனின் கதையைப்போலல்லவா இருக்கிறது இவன் பேச்சு? ஆகாயமாம்.......தும்பியாம்......... ஆளைப்பாரு!' என்று முகத்தைச் சுளித்தபடி, சிலம்பு கூறினாள்.

'இந்தாம்மா சிலம்பு! நான் உங்களிடம் வந்து, பசிக்கிறது என்று அழுது, புண்ணியவதிகளே ஏதாவது புசிக்கத்தாருங்கள் என்று கேட்டேனா? நீங்களாகத்தானே என்னிடம் வந்து, இதோ தங்கக் கிண்ணத்திலே நிலவுபோலச்சோறு இருக்கிறது. அட்டியின்றி அள்ளிச் சாப்பிடு என்று கெஞ்சி நிற்கிறீர்கள்? எங்கோ கிடப்பவனை வலிய தேடிவந்து, ஊறுசெய்யும் பசியைப் போக்கச் சோறு கொண்டுவந்திருக்கிறேன் என்று சொல்லும் சொர்ண மேனியாளைப் பார்த்து, கால் பிடிக்கும்படிச் சொல்வது மட்டுமல்ல— கன்னத்தைத் தரும்படியாகக்கூடக் கேட்பான்! கதை சொன்னாளாம், கதை!'

'நான் கதை சொன்னது...'

சிலம்பு என்ன சொல்கிறாள் என்று கவனிக்காமல், காஞ்சனாவின் யோசனை வேறு திசையில் சென்றது.

'இவன் சாதாரண போர்வீரனாகவோ, அல்லது இப்பொழுது பேசுகிறானே அதைப்போன்ற உள்ள உறுதி பெற்றவனாகவோ நிச்சயம் இருக்கமாட்டான்! யாரோ இவன், ஏதோ திட்டத்தோடே இங்கு வந்திருக்கிறான்! இவன் வேண்டுமென்றே தடாகத்திற்கு வந்தது மட்டுமல்ல, தண்டனையையும் ஏற்றுக்கொண்டிருக்கிறான்! இவனது நடத்தையிலும்பேச்சிலும் நிச்சயமாக ஏதோ சூது இருக்கிறது? கொங்கு நாட்டின விரோதிகளினால், ஏவிவிடப்பட்டவனாகக் கூட இவன் இருக்கலாம்! சரி, இவனோடு இன்னும் சிறிது நேரம் பேசி, நுட்பமாக உட்கருத்தை அறிய முயற்சி செய்யவேண்டும்!' என்ற எண்ணத்தோடு, அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

'இன்னும் எதற்கம்மா இவனோடு பேச்சு — நாம் போகலாம். அரசர் சந்தேகப்பட்டு......'

'சும்மா இரு சிலம்பு, எல்லாம் எனக்குத் தெரியும்!......பூஞ்சோலை இப்பொழுது — நீ என்ன சொல்கிறாய்?'

'எதைப்பற்றி?'

'வேறு எதைக்குறித்து-நீ தப்பிப் பிழைப்பதைக் குறித்துத்தான்!'

'என்மீது ஏன் உமக்கு இவ்வளவு அக்கறை?'

'பூஞ்சோலை! என்னால் யாருக்கும் எந்தவிதமான தொல்லையும் வரக்கூடாதென்பது, என் எண்ணம்!'

'ஆனால் என் எண்ணம் வேறு விதமாக அமைந்துவிட்டது; இளவரசியாரே! உயிர் போவதானாலும், ஒரு பெண்ணின் உதவியை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்!'

'உன் நடத்தை முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறதே! பெண்ணின் உதவியை ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று இப்பொழுது வீரம் பேசும் இதே வாய்தான், குளக்கரையில் என்னிடம் ஒரு உதவியைக் கேட்டது!'

எவ்வளவோ எச்சரிக்கையோடு பேசியும், தான் தவறிவிட்டதையும், அந்தத் தவற்றை உடனே சுட்டிக் காட்டிய காஞ்சனாவின் புத்திசாதுர்யத்தையும் எண்ணி, குலசேகரன் ஒரு கணம் திகைத்து நின்றுவிட்டான்! மறுகணம் அந்தத் திகைப்பு இன்னும் அதிகமாயிற்று — அவர்களை நோக்கி யாரோ வேகமாக நடந்து வருவதை அறிந்து!

'காஞ்சனா! காஞ்சனா!' கோபத்தோடு ஒரு குரல் கொக்கரித்தது.

'அப்பா!' இப்படி அலறிய இளவரசியின் கையிலிருந்த தீப் பந்தம், தரையில் நழுவி விழுந்துவிட்டது. அந்தத் தீப்பந்தத்தை, அரசர் உடனே குனிந்து எடுத்துக்கொண்டார்.

'காஞ்சனா! கொங்கு நாட்டின் மாண்பையே மண்ணாக்கிவிட்டாய்! அந்தப்புரத்திலே இருக்கவேண்டிய நீ, இந்த அர்த்தராத்திரியிலே இங்கு...

'தவறாக எண்ணிவிட்டீர்கள் அப்பா!'

'நேருக்கு நேர் நான் பார்க்கிறேன் —இனி என்னை ஏமாற்றமுடியாது! உன் திருமணத்தைப் பற்றிப் பேசி முடிக்க நான் தென் பாண்டிநாடு சென்றிருக்கையில், இப்படி நீ திருட்டுக் காதலனோடு...'

'அப்பா! அர்த்தம் தெரிந்து வார்த்தைகளை உபயோகியுங்கள் அப்பா, என் இதயம் இதையெல்லாம் தாங்காது!' என்று கோபத்தோடு கூறிவிட்டு, அவ்விடத்தை விட்டுச் செல்லப் புறப்பட்ட காஞ்சனாவின் கையைப் பிடித்து அரசர் நிறுத்தினார். கோபத்தால் அவர் கண்கள் விரிந்தன, நெற்றி சுருங்கியது.

'நில் எங்கே ஓடப் பார்க்கிறாய்! எத்தனை நாட்களாக நடைபெறு

கிறது. இந்தக் கபட நாடகம்? யார் இவன்? இப்பொழுது இவனைத் துண்டுதுண்டாக வெட்டிக் காக்கை, கழுகுகளுக்கு இரையாக்குகிறேன்!' என்று அடங்காத ஆத்திரத்தோடு கூறிக்கொண்டே, சிறைக் கம்பிகளுக்கு அந்தப் பக்கமாக நின்றிருந்த வாலிபனின் முகத்தை உற்றுப் பார்த்தார்!

'ஆ! நீயா? இதென்ன விபரீதம்?' ஆச்சரியத்தின் மிகுதியால், அதற்கு மேல் அரசரால் பேசமுடியவில்லை!

தந்தையின் ஆச்சரியத்தைக் கண்டதும், 'அப்பா! இவனை நீங்கள் முன்பே அறிவீர்களா?' என்று பயந்த குரலில், தயக்கத்தோடு வினவினாள், காஞ்சனா!

'காஞ்சனா! என்ன கர்வம் உனக்கு? இவன் அவன் என்று உளறுகிறாயே!...குலசேகரா,இதெல்லாம் என்னப்பா விளையாட்டு? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!'

'மாமா! தங்களது ஆசை மகளைக் கேளுங்கள்—அவளுக்குத்தான் சகலமும் தெரியும்!, என்று குலசேகரன் கூறியதும், குபீரென்று அந்தக் குமரிப் பெண்ணின் கண்கள் சிவந்துவிட்டன!

O

முதல் இரவு தன் மனைவி காஞ்சனாவைத் தனிமையில் சந்தித்த போது, 'இளவரசியாரே! இதோ வந்திருக்கிறேன், பூஞ்சோலை!' என்று பயபக்தியோடு கூறுபவனைப் போலச் சொல்லிக்கொண்டே, மஞ்சத்தின் அருகே வந்து நின்றான்.

அந்தக் கற்கண்டு மேனியாள் நாணத்தோடு கட்டிலைவிட்டெழுந்து மலர் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டாள்!

'வெட்கம் வந்துவிட்டதா?' என்று அவளது வளைக்கரத்தைப் பிடித்திழுத்து, பஞ்சணையில உட்கார வைத்தான். உதட்டில் புன்னகை தவழ, அவள் முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பின!

ஓர் ஆண்டிற்குப் பிறகு, ஓர் இரவு அதே பஞ்சணையில் அவன் தனியாகப் படுத்திருந்தான்! பலகணியின் வழியாகப் பார்வையைச் செலுத்தி, வானத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்த நட்சத்திரங்களைக் கவனித்தான்! கண்கள்தாம் விண்மீன்களைப் பார்த்தனவே அன்றி, அவன் மனம் வேறு எதையோ குறித்து யோசித்துக் கொண்டிருந்தது. அதே மஞ்சத்தில் ஆருயிர் மனைவி காஞ்சனமாலையோடு களிப்பு வெள்ளத்தில் திளைத்திருந்த இன்ப இரவுகளின் நினைவு, அவன் இதயத்தைத் தடவிக் கொடுத்தது!

'இளவரசருக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி!'

இப்படிப் பல்லெல்லாம் தெரிய கூறிக்கொண்டே, அங்கு வந்து நின்றாள், தோழி சிலம்பு! அவளது உதடுகளின் அசைவை ஆவலோடு குலசேகரன் கவனித்தபடி, கட்டிலில் எழுந்து உட்கார்ந்தான்.

'மகன் பிறந்திருக்கிறான்!'

சிலம்பின் வாயினின்றும் உதிர்ந்த இந்தத் தித்திப்பு வார்த்தை, நேராக அவன் இதயத்திற்குள் ஓடி ஆனந்த நடனம் செய்தது!

'மகன்! மகன்! என் மகன்?' என்று அவன் மனதிற்குள்ளேயே மகிழ்ச்சியோடு முணுமுணுத்துக் கொண்டு, கழுத்திலிருந்த முத்து மாலையைக் கழற்றி, புன்னகையோடு சிலம்பினிடம் கொடுத்தான்.

'காஞ்சனா...'

'நலமாக இருக்கிறார்கள், இளவரசே!'

'குழந்தையை நான் பார்க்க வேண்டுமே, சிலம்பு!'

'அவசரம் வேண்டாம், பிறகு வந்து அழைத்துச் செல்கிறேன்?'

அவ்விடத்தை விட்டு சிலம்பு போய்விட்டதும், கட்டிலை விட்டு துள்ளிக் குதித்து அவன் பலகணியின் அருகே சென்றான்.

'பூத்து மணம்தெளிக்கும் வண்ண மலர்களே? பூரிப்போடு ஆடிவரும் புதுத் தென்றலே! பரந்திருக்கும் வானமே! பண்பொழியும் நட்சத்திரங்களே! உங்களுக்குத் தெரியுமா—எனக்கு மகன் பிறந்திருக்கிறானே!'

'நட்சத்திரங்களுக்கு மட்டுமா, நந்தவனத்திலே இருக்கும் மான், மயில், புறா, கிளி சகலவற்றிற்கும் தெரியும்—பாண்டிய நாட்டு இளவரசருக்கு, பத்தரை மாற்று தங்கச் சிலை பிறந்திருக்கும் செய்தி!' என்று சிரித்த முகத்தோடும், குறும்பு நிறைந்த குரலோடும் சொல்லிக் கொண்டே நன்னன் அந்த அறையினுள் நுழைந்தான்.

'என்ன நன்னா, கேலி செய்கிறாய்?'

'பிறகு என்ன, நட்சத்திரங்களைப் பற்றியிருக்கும் அக்கறைகூட, என்னைப்பற்றி யில்லையே! நட்சத்திரங்களைக் கேட்பதற்கு முன்னர், என்னை அழைத்து,'நன்னா, எனக்கு மகன் பிறந்திருக்கிறானே, தெரியுமா?' என்று கேட்கவேண்டாமா?'

'தவறுதான், நன்னா!'

'உம்! அப்படி ஒத்துக்கொள்ளுங்கள்!...அது சரி, மகனுக்கு என்ன பெயரோ?'

'பெயரா நன்னா, முன்னாலேயே நானும் காஞ்சனாவும் முடிவு செய்து வைத்துவிட்டோம்!'

'என்னவென்று?'

'மகனாகப் பிறந்தால், விக்கிரமன் என்றும்...'

• மகளாகப் பிறந்தால்?'

'பிறக்கட்டும், அப்பொழுது அதைச் சொல்லுகிறேன்!'

[வளரும்]

முழுக்க முழுக்க ஒரு கற்பனைக் கதையல்ல இது! முடிவிலே வருகின்ற நிகழ்ச்சி பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னுல் உண்மையாகவே நடந்தது.

ஆர்வலை

கா. வேழவேந்தன் பி.ஏ.பி.எல்

வெள்ளல் நிலா ஒளியை வாரி இறைத்துக் கொண்டிருந்தது- நடந்தேன்.

வெள்ளை வேட்டியை விரித்தது போல நீர் காணுத அந்தக்காருறு, நிலா வெளிச்சத்தில் துல்லியமாக விளங்கியது.

ஆற்றங்கரை ஓரமாக நடந்து கொண்டேயிருந்தேன்.

தலைக்கோழி கூவு முன்னுல் கலப்பையோடும் கவலைச் சாலோடும் வயல் நோக்கிக் கிளம்பவேண்டாமா? அந்தச் சிற்றூர் மக்கள் எப்போதோ உறங்கிவிட்டார்கள்.

என் காலடி ஓசையைத் தவிர வேறு அரவம் இருக்கவேண்டுமே!

பக்கத்திலே இருந்த புதரிலிருந்து ஏதோ அணிலொன்று பாதி கடித்த கோவைக் கனியைக் கீழே எறிந்திருக்கவேண்டும். சிறிய சத்தம் மட்டும் எழுந்துவந்தது.

சற்றுத் திரும்பிப் பார்த்துவிட்டு மெள்ள நகைத்துக்கொண்டேன். உயர்மட்டத்திலேசென்று அமர்ந்துவிட்டால், அணிலுக்கும் 'அந்தப் புத்தி' வந்துவிடுமா?

இறுதியாக அந்தச் 'சொர்க்க ஓடை'யை அடைந்தேன்.

தாவிவரும் குழந்தை ஏறிவிளையாட மண்டியிட்டு முதுகைக் காட்டும் தந்தையைப்போல், அமர்வதற்கு வசதியாக முதுகு வளைந்திருக்கும் அந்த ஓடையோரத்து நாவல் மரத்தின்மீது வந்து உட்கார்ந்தேன்.

எங்கே எனக்கு முன் தங்கம் வந்து காத்திருப்பாளோ என்று அஞ்சித்தான் விரைந்து வந்தேன் நான்.

நல்ல வேளையாக என் தங்கம் இன்னும் வந்து சேரவில்லை; எல்லோரின் குறட்டையொலியும் ஒருமுகமாக எழுந்தால்தானே அவள் தன் வீட்டைவிட்டுப் புறப்பட்டு வர முடியும்? இன்னும் எந்தப் பொல்லாத கண்களுக்குத் தூக்கம் வரவில்லையோ?

ஆடகத் தங்கம் அசைந்துவரும் திக்கையே ஆவலுடன் விழிகள் நோக்கிக்கொண்டிருந்தன.

ஓடையைச் சுற்றிலும் உயர்ந்து அடர்ந்திருந்த புதர்கள் எங்கள் காதற்கோட்டையின் மதிற்சுவர்களாக நின்றுகொண்டிருந்தன.

அதோ! என் நெஞ்ச வானத்திலே கொடிபோட வந்த ஒளிமின்னல் வந்துவிட்டது.

தாவி அணைத்தேன். தலைமுக்காட்டை நீக்கினேன்.

"தங்கம்! வியர்க்க வியர்க்க நடந்து வந்திருக்கிருயே! பேய் பிசாசுபற்றிய கலக்கமா?" ஆறுதல் கூறுவதாக நினைத்துக் கேட்டேன்.

"இல்லை, அத்தான்! ஊராரின் வாய்க்கும் கண்களுக்கும்தான் அஞ்சுகிறேன். பேய் பிடித்தால் பூசாரி மட்டும்தான் தாக்குவான்; அசைபோடுவதற்கு அவல் கிடைக்காமல் தவிக்கும் சிலர் வாயிலே நாம் அகப்பட்டுக்கொண்டால் ஊரே ஒன்ருகத் தாக்காதா? அதற்காகத்தான் நாளும் நாளும் செத்துப் பிழைக்கிறேன்". தங்கத்தின் தமிழ்ப் பெண்மை பேசிற்று.

"தங்கம்! ஊரைப்பற்றியும் உலகத்தைப்பற்றியும் கவலைப்படாதே என்று நாடக உரையாடலை நான் கூறமாட்டேன். எனக்கும் புரிகிறது. முலாம்பழத் தோட்டத்திலே இருக்கும் பிஞ்சைப்பற்றியும், காயைப்பற்றியும் கவலைப்படாத நரிகள்கூட பழுத்தால் படையெடுக்கின்றன. பருவ மங்கையாகப் பூத்துக் குலுங்கும் உன்னை எல்லோரும் கண்காணிப்பார்கள் என்பது எனக்குப் புரியாமலா இருக்கிறது? இருந்தாலும் காலமும் சூழ்நிலையும்தானே நம்மைப் பத்தியம்போட்டுப் படாத பாடு படுததுகின்றன! அன்பே, நெஞ்சத்தைத் திறந்து பேசு! உடற் கவர்ச்சியை மட்டும் வைத்தா நீ என்னைக் காதலித்தாய்? உன் உருவ எழிலை மட்டும் கண்டா நான் உன்னையே சுற்றிவந்து கொண்டிருக்கிறேன்? இல்லை, கண்ணே! ஏதோ என் எண்ணத்திற்கே எட்டாத ஒப்பற்ற உறவு அறுபடாமல் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கிறது.

"நினைவிருக்கிறதா? நீ பூப்படையாத சின்னஞ்சிறுமியாக இருந்த காலமது! நானும் சிறுவனுக இருந்த நேரம். இதே ஆற்றிலே இடுப்பளவு தண்ணீர் ஓடும்போது இந்த நாவல் மரத்தின் மேலேறி வெள்ளத்திலே குதிப்போமே, அந்த நாட்களை எண்ணிப்பார்! உன் தமக்கை மரகதமும் வந்திருப்பாள். எத்தனையோ சிறுவர் சிறுமியர் கும்பலாக வந்து குளிப்பார்கள். ஆனுல் மரத்தின் கிளையிலே ஏறி நீரில் குதிக்கும் போது, நாமிருவர் மட்டும் ஒன்ருக அணைத்துக்கொண்டு குதிப்போமே, அது ஏன்? மூழ்கிப்பிடிக்கும் விளையாட்டிலும், எவ்வளவோ பேர் இருக்க உன்னையே நான் பிடிப்பதும், என்னையே நீ தொடுவதும மிகுதியும், நிகழுமே, அது ஏன்? இவையெல்லாம் காதல் உணர்ச்சியாலா? அல்ல, அன்பே! என் விழி நிறைந்த தங்கச் சிலையாக நீ மட்டுமே உருவாகிவிட்டாய். உனக்கும் அப்படியே நானுனேன். ஆகவே நம்மை எதுவோ அல்லது யாரோ பிரித்துவிட முடியும் என்று நீ ஏன் கலங்கவேணடும்?" நான முடிக்கவில்லை.

இப்படித் தேனெழுகப் பேசிப் பேசிததானே என்னை ஈர்த்துவிட்டீர்கள். நீங்கள் சென்னைக்குப் படிக்கப்போனுலும் போனீர்கள்; என் நெஞ்சததின திகில் மேலும்மிகுந்துவிட்டது. ஏற்கெனவே உங்கள் குடும்பமும் எங்கள் குடுமபமும் மலையும் மடுவுமாக இருக்கின்றன. உங்கள் இல்லத்தார் மிகுதியாக

நிலமிருப்பதால் குத்தகைக்கு விடுபவர்கள்! எங்கள் இல்லத்தார் நிலமே இல்லாத காரணத்தால் குத்தகைக்குப் பயிரிடுபவர்கள்! இந்த வேற்றுமையுடன் நீங்கள் கல்லூரியிலும் புகுந்து வெளியே வந்திருக்கிறீர்கள். நானோ பட்டிக்காடு, நீங்களோ பட்டதாரி..."

உடனே நான் தங்கத்தின் வாயைப் பொத்தி மேலும் பேச விடாமல் மூடினேன்.

"என்ன தங்கம் இது? நான் மேலும் மேலும் பட்டை தீட்டப் பட்ட வைரமாகவே இருக்கலாம். இந்தத் தூய தங்கத்தோடு பொருந்தினால்தானே நான்நல்ல அணியாக உருவாக முடியும்? என்னால் தனித்து நிற்கமுடியுமா? அல்லது இயங்கத்தான் முடியுமா? என்னை இளமையிலேயே என் தாய் தந்தையர் என் சிற்றப்பாவிடம் ஒப்படைத்துவிட்டுப் போய்விட்டார்கள். பாசஉணர்வே என்னவென்று அறியாத நான் காதல் உணர்வையாவது முழுதும் சுவைக்கக் கூடாதா? தங்கம்! ஒன்றை மட்டும் நினைவிலே வைத்துக்கொள், என் கைகள் போடப்போகும் மணமாலையை ஏற்கும் கழுத்து உன் சங்குக் கழுத்து ஒன்றுகத்தான் இருககமுடியும்! உன் கையேந்தும் மாலையும் என் தோளைத் தவிர, வேறு எந்தத் தோளுக்கும் போக முடியாது, இது உறுதி!"

"பொறுங்கள் அத்தான்! நாம் என்ன அமெரிக்க நாட்டிலா இருக்கிறோம்? அந்தஸ்து பொருந்தி, ஜாதகம் பொருந்தி, முறை பொருந்தினால்தானே இந்த நாட்டிலே திருமணம் நடந்தேற முடியும்?"

"இல்லை, தங்கம்! அந்தஸ்தைப் பற்றிக் கவலைப்படுபவர் படட்டும். உன் அக்காவின் திருமணம் நடந்தேறிவிட்டால் அடுத்துப் பெண் கேட்க, என் வீட்டாரை உன் வீட்டுக்கு நானே அனுப்பிவைப்பேன். இதற்கு இடையில் அந்த முக்கியமான செய்தியைச் சொல்லத்தான் உன்னை இந்த இரவில் வரச்சொன்னேன். இரண்டாண்டுத் தொழிற் படிப்புக்காக அடுத்த வாரம் நான் மேற்கு செர்மனிக்குப் போகிறேன். இரண்டு ஆண்டுகளை இரண்டே நொடிகளாகக் கழித்துவிட்டு ஓடோடியும் திரும்பி வருவேன். அதுவரை நம் காதற்சந்திப்புபற்றிய இரகசியம் நம் இருவருடன் மட்டுமே இருக்கட்டும்!"

"அத்தான்! நிலவோன் உலகையே வலம் வரலாம். இருக்கின்ற குளத்தைவிட்டு அல்லி எங்கே அத்தான் போகப்போகிறது? செத்தாலும் சாகுமேதவிர, நிலவோனைக் காட்டிலும் ஒளியுடைய கதிரவன் வந்தாலும், அது இதழை மூடிக் காப்பாற்றிவைப்பதில்லையா? போய் வாருங்கள். நெஞ்சத்தின் ஒருகோடியிலே இந்தப் பேதையின் நினைவு இருக்கட்டும்!" மேலும் பேச முடியாமல் தங்கம்அழத்தொடங்கினாள்.

எப்படித் தேற்றுவது என்று புரியாமல் தவித்தேன் நான். பிரிவுப் பேச்சை வேறு திசைக்குத் திருப்ப முயன்றேன்.

"பார்த்தாயா, தங்கம்? இந்த நாவல் மரத்தின் கனிகள் பழுத்துக் குலுங்கும்போது, நான் உச்சாணிக் கிளையிலே ஏறிக் கிளையை அசைப்பேன். கருவண்டுகளைப் போன்ற கனிகள் உன் தலையிலே மழையாகப் பொழியும். அந்த இளமை நினைவுகள் எவ்வளவு இன்பமாக நெஞ்சிலே நிழலாடுகின்றன. இப்போது மட்டுமென்ன? கனிகள் பழுத்திருக்கின்றன. நான் ஏறிப் பறிக்கட்டுமா?" என்று கூறிக் கொண்டே, மரத்தின் உச்சிக்கு ஏறினேன்.

"கால்களைக் கவனமாக வைத்து ஏறுங்கள், இரவு நேரமிது" என்றாள் தங்கம்.

"கனிகளை உலுக்கிய நான், பழுத்திருந்த கொழுத்த கனிகளைக் கண்டதும், ஒரே குலையாகக் கிளையுடன் உடைத்துக் கீழே எறிந்தேன்.

"தங்கம்! குலையாகக் கீழே விழுகிறது, எடுத்துக்கொள்" என்றேன்.

"அட்டே! என்னங்க இது, குலையை மாட்டுச் சாணத்திலே எறிந்து விட்டீர்களே! பாதிக் குலை சாணத்திலே விழுந்து விட்டதே! மீதிப் பழங்களையாவது பறித்துக் கொள்ளட்டுமா?" என்றாள் தங்கம்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி

கள் பெறுவது, மக்களிடம் விழிப்புணர்ச்சி எழுச்சி ஏற்படுத்துவது என்கிற காரியத்தில் ஒவ்வொரு அமைப்பும் தனித்தன்மையுடன்தான் பணியாற்றி வருகிறது. வலிவும் பயனும் மிகுந்திட அந்தத் தனித் தன்மை தேவையுங்கூட.

ஆனால், பொதுத்தேர்தல் என்பது, எதேச்சாதிகாரத்தைக் களத்தில் சந்திக்கும் நாள்! அந்த நாள், மற்ற நாட்களில் தனித்தன்மையுடன் பணியாற்றிக் கொண்டுள்ள கட்சிகள், பொது நோக்கமான எதேச்சாதிகாரஒழிப்புக்குத் தத்தமது வலிவினைத் தக்கமுறையில் பயன்படுத்தும் முறையினை, அந்த நோக்கம் கொண்ட அமைப்புகளுடன்கூடிக் கலந்துபேசி ஒரு திட்டம் வகுத்துக்கொண்டாக வேண்டிய நாள்.

பொது நோக்கத்தில் வெற்றி பெற, கட்சிகள் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளாமல், எவர் எங்கு? என்பது பற்றிய நிலையைக் கணித்து வள்ளுவர் கூறியபடி இதனை இதனால் இவன் முடிக்கும் என்று அறிந்து அதனை அவன்கண் விடல் என்ற நெறியினை மேற்கொள்ள வேண்டும்.

கூட்டு என்பதைவிட கூட்டணி என்றிருக்கலாமே, தனிச் சின்னம், தனி முயற்சி என்பதைவிட கலப்புச் சின்னம் கலப்பு முயற்சி இருக்கலாமே, உடன்பாடு என்பதைவிட ஒன்று கூடுவது என்று இருக்கலாமே, தனித்தனியே கொள்கைகளை வகுத்துக் கொண்டு மக்களை அணுகுவதைவிட, பொதுநோக்கத்திற்கு ஏற்ற ஒரு குறைந்த பட்ச கொள்கை அல்லது வேலைத் திட்டம் வகுத்துக்கொண்டு அந்த அடிப்படையில் பொதுத் தேர்தலில் ஈடுபடலாமே என்று பல்வேறு 'யோசனைகளை'த் தருகின்றனர். நன்றி. மகிழ்ச்சி. ஆனால் தி. மு. கழகம் வகுத்துக்கொண்டு செயல்பட விரும்புவது முன்பு குறிப்பிட்ட வள்ளுவன் வகுத்த வழி —இதனை இதனால் இவன் முடிப்பான் என்று கண்டறிவது (கூறிவிடுவது அல்ல! ஆசையைத் தெரிவிப்பது அல்ல! உரிமை எழுப்புவது அல்ல! கண்டறிவது!) அதற்கு ஏற்ப 'அதனை அவனிடம் விடல்' என்பதாகும்.

எனவே, கொள்கை முரண்பாடு கொண்டவர்கள் கூட்டணி அமைப்பதா! கூட்டணி அமைத்திடின் பங்குச் சண்டை வராதா!! என்றெல்லாம் சிலர் பேசுவதனைப் பொருட்படுத்தத் தேவை இல்லை.

காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தவேண்டும், என்ற நோக்கம் கொண்டவர்கள் தமக்குள் மோதிக் கொள்ளாமல் இருந்திடவும், கூட்டுச் சக்தியைக் கொண்டு காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தவும் வழி வகுத்திட வேண்டும். இஃதே கழகம் கொண்டிடும் முறை, போக்கு, நோக்கம்.

சம்யுக்த சோஷியலிஸ்டு தலைவர் ஜோஷி அவர்கள், கழகப் பொதுக் குழுவில் 'தேர்தல் உடன்பாடு' பற்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை வரவேற்று, கழகப் பொதுச்செயலாளருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். அதற்கு அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதுடன், கழகத் துவக்கம், அந்த நாள், இந்த நாள் நிலைமைகள், பொதுத் தேர்தலில் கழகம் மேற்கொள்ள விரும்பும் முறை ஆகியவற்றினையும் விளக்கிட முற்பட்டோம்.

பொதுத் தேர்தலில் நாம் மேற்கொள்ள விரும்பும் 'உடன்பாடு' பற்றி, சோஷியலிஸ்டு கட்சித் தலைவர் மகிழ்ச்சி தெரிவித்திருப்பது நமது கழகம், வேறு பல அரசியல் கட்சிகள் கூர்ந்து கவனிக்கும் 'இடம்' பெற்றிருக்கிறது என்ற மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த நாள் மகிழ்ச்சியைப் பெற்றிடும்போது, 'அந்த நாள்' பற்றிய நினைவை மறந்திடக்கூடாது என்பதற்கே அதனையும் குறிப்பிட்டோம்.

அந்த நாள் தொட்டு 'இந்த நாள்' வரையில், எந்த தொண்டுள்ளம், தன்னல மறுப்பு, இன்னல் கண்டு கலங்காத தன்மை, ஓயாத உழைப்பு, உன்னதமான கூட்டு முயற்சி, தோழமை, குடும்பப்பாசம் நம்மிடம் ததும்பி ஏற்றத்தையும் வெற்றியையும் தேடித்தந்ததோ அது இனியும் தொடர்ந்து இருந்திடவேண்டும்— மிகுதியாகிடவேண்டும் என்பதனை மறவாமல் கழகத் தோழர்கள் பணியாற்றிட வேண்டுகிறோம்.

'அந்த நாள்' நாம் கேலிச் சித்திரங்கள்; இந்த நாள், கேள்விக் குறிகள்!!

"வேண்டாம், தங்கம். சாணத்திலே விழுந்ததைப் போய் ஏன் எடுக்கிறாய்? புதிதாகவே பறித்துப் போடுகிறேன்," என்றேன் நான்.

இப்படியே இரவைப் பகலாக்கி விட்ட நாங்கள், எங்கே பகல் வந்து விட்டால், காதற் சந்திப்புக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று பிரியாமற் பிரிந்தோம். தங்கத்தை அவள் வீட்டுக்கு அனுப்பிவிட்டு, நான் வந்து படுக்கும்போது சாமக் கோழி கூவிற்று. என் விழிகளை இமைக் கதவுகள் வந்து மூடின.

O

பெர்லின் நகரத்து வாழ்க்கையையும் நான் பிறந்த சிற்றூரின் வாழ்க்கையையும் இங்கே வந்ததும் சில நேரங்களில் எண்ணிப் பார்க்கிறேன்.

கால் வீசை மீனைப் பிடிக்க காலை முதல் மாலை வரை தூண்டிற்கோலுடன் உட்கார்ந்திருப்பான் என் ஊர்க்காரன்!

ஆயிரம் பேர் நாள் முழுதும் செய்யக்கூடிய வேலையை அரை மணியில் முடிக்கும் இயந்திரத்தை உருவாக்குகிறான் பெர்லின்காரன்!

இவ்வளவு மாற்றம் நிறைந்த விஞ்ஞானபுரியிலே நான் இயங்கினாலும் என் இதயம் என் அன்புத் தங்கத்தையும், நாவல் மரத்தையும், ஆற்றோரடையையும் சுற்றி வலம் வந்துகொண்டே இருந்தது.

கார்மேகம் வராதா என்று நம் நாட்டு உழவர்கள் ஏக்கத்தோடு வானத்தைப் பார்ப்பதில்லையா?

நானும் ஏக்கத்தோடு வானத்தைப் பார்ப்பேன்; ஏன் தெரியுமா?

ஒலியைக் கிளப்பிவரும் அந்த விமானத்திலேதான் என் உயிர்த் துடிப்பான தங்கத்தின் கைவண்ணங்கள் மிதந்து வந்தன.

> **முகப்பில்:**
>
> இந்த இதழில் வெளிவந்துள்ள 'ஆற்றோரடை' என்ற சிறுகதையில் வரும் ஒரு சம்பவம்.

நாங்கள் இருவரும் உருவாக்கிய விமான விடுதூதுக் காவியங்கள் எங்கள் காதலை மென்மேலும் வளர்த்தன.

இந்த நேரத்திலேதான் தங்கம் தீட்டிய அந்தக் கடிதமும் வந்து சேர்ந்தது.

பிரித்தேன்; படித்தேன்.

ஆயிரம் சம்மட்டி அடிகள் தலை மீது விழுந்தன. என் மூளை சிதறியது.

[அடுத்த இதழில் முடியும்]

8-ம் பக்கத் தொடர்ச்சி

இப்படித்தானே வாதாடுகிறார்! ஆகவே பக்தவத்சலனாரின் வாதம் புதிது அல்ல! நெடுங்காலமாக இருந்து வருகிற வாதம்! ஆதிக்கம் அழிந்து படுமோ என்ற அச்சம் பீடிக்கும் நிலையிலுள்ளவர்கள் வழக்கமாகக் கூறிடும் வாதம்.

> தூக்குக் கயிற்றைக் கழுத்திலே மாட்டுவதற்கு ஒரு விநாடிக்கு முன்புகூடக் கேட்கிறார்கள் கேபிரியலை, ஏதாவது சொல்லிக் கொள்ள விரும்புகிறாயா? என்று.
>
> நானா! ஏதும் இல்லை. கயிறு பேசும்!! என்கிறான் கேபிரியல்!

டக்ளஸ் டில்மன் குடிஅரசுத் தலைவரான நாட்களில் நீக்ரோக்களுக்கு சமத்துவம் கிடைத்திடச் செய்வதற்குப் புரட்சியே சரியான வழி என்ற கருத்துடன் டர்னரைட் என்ற ஒரு இயக்கம் இருந்துவருகிறது.

இந்த இயக்கம், கம்யூனிஸ்டுகளால் நடத்தப்பட்டு வருகிறது; அமெரிக்காவை அழிக்கவே, நீக்ரோக்களின் விடுதலை என்ற பெயர் கூறிக்கொண்டு இந்த பயங்கர இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது என்று அமெரிக்க அரசு கூறிவந்தது. ஒரு நீக்ரோவே குடிஅரசுத் தலைவர் ஆகிவிட்டதால், இந்த பயங்கர இயக்கம் மேலும் துணிவு பெற்று ஆட்டம் ஆடுமோ என்ற அச்சம் கொண்ட வெள்ளைநிற ஆதிக்கக்காரர்கள் இந்த பயங்கர இயக்கம் கம்யூனிஸ்டுகளின் கைப்பாவை, ஆகவே அதனைத் தடைசெய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

டர்னரைட் இயக்கம் கம்யூனிஸ்டு இயக்கம் அல்ல; நிறவெறியை நிலைநாட்ட விரும்பும் வெள்ளையர் சுமத்தும் பழி அது; ஆகவே டில்மன் அந்த இயக்கத்துக்குத் தடை ஏதும் போடக்கூடாது என்று நீக்ரோ மக்கள் வலியுறுத்துகிறார்கள்.

டில்மன் யார் பக்கம் சேருவார்? தன் இன மக்கள் பக்கமா? வெள்ளையர் பக்கமா? என்ற கேள்வி எழுந்தபோது டில்மன் உறுதியாகத் தெரிவிக்கிறார், அந்த இயக்கம் உண்மையிலேயே பயங்கர நடவடிக்கையில் ஈடுபடுகிறது, கம்யூனிஸ்டுகளால் நடத்தப்படுகிறது என்று மெய்ப்பிக்கப் பட்டாலொழிய அதனைத் தடை செய்யப் போவதில்லை; நமது சட்டம் இடந் தராது; நான் அந்த இயக்கம், கருப்பருக்காகவா, வெள்ளையருக்காகவா என்று பார்க்கப் போவதில்லை; அது அமெரிக்காவின் நன்மைக்கா, அமெரிக்காவைக் கெடுக்கவா, எதற்குப் பயன்படுகிறது என்பது பற்றித்தான் பார்க்கப்போகிறேன் என்று கூறுகிறார். அவரைச் சூழ இருந்த வெள்ளைப் பேரதிகாரிகளுக்கு அடக்கமுடியாத கோபம். ஒரு நீக்ரோவைக் கொண்டே நீக்ரோ விடுதலை இயக்கத்தைத் தடைசெய்து விடலாம், அதற்கு டில்மன் குடிஅரசுத் தலைவராகி இருப்பது பொன்னான சந்தர்ப்பம் என்று அந்த ராஜதந்திரிகள் கருதித் திட்டமிட்டனர். டில்மன் ராஜதந்திரம் படிக்கவில்லை; ஆனால் இதயம் இருந்தது. அதிலே நீதிக்கும் நேர்மைக்கும் இடம் இருந்தது. பொறுப்புணர்ச்சி போதுமான அளவு இருந்தது. எந்தச் செயலும், அமெரிக்க நாட்டுக்கென அமைந்துள்ள சட்ட திட்டத்திற்கு உட்பட்டதாக, அதன் ஒழுங்கைக் குலைத்திடாததாக இருக்கும்படித்தான் அமையவேண்டும், வேறு விருப்பு வெறுப்புகளுக்கு இடமளிக்கக்கூடாது என்ற உறுதிகொண்டிருந்தார்.

மகன் ஜூலியன் வந்து பார்த்து மகிழ்ச்சி பொங்கப் பொங்கப்பேசும்போதுகூட, டில்மன் இந்த நோக்கதை உறுதியாகத் தெரிவிக்கத் தவறவில்லை.

> அற்புதம் நடந்துவிட்டது, அப்பா! அற்புதம்! வெள்ளை மாளிகையில் தாங்கள் வீற்றிருக்கும் வாய்ப்புக் கிடைத்ததை நாங்கள் ஒரு அற்புதம் என்றே கருதுகிறோம். அப்பா! நமது இனத்தவரும், அவர்களுக்காகப் பணியாற்ற ஏற்பட்ட அமைப்புகளும் ஒரு நூற்றாண்டுக் காலத்தில் சாதிக்க முடியாததை, தாங்கள் ஒரு நொடியில் சாதிக்கும் வாய்ப்பு அப்பா! இது! நமது இனத்தவர் எவ்வளவோபேர் மடிந்தனர், உரிமை கேட்டு; அல்லற்பட்டனர்; அவதிப்பட்டனர். இப்போது வெள்ளையர்களுக்கு ஆணைபிறப்பிக்க முடியும் தாங்கள்......

ஆர்வமும் நம்பிக்கையும் கொந்தளிக்கும் விதமாக ஜூலியன் பேச்சு, தன் தகப்பனார் பதவிக்கு வந்திருப்பது நீக்ரோ இனத்தின்மீது சுமத்தப்பட்டுள்ள பழியினை ஒரே வரியால் துடைத்திடத்தான் என்ற நம்பிக்கை. டில்மன் அமைதியாகத்தான் பேசுகிறார்.

> நான் யாரையும் எதையும் செய்யச் சொல்லி வற்புறுத்துவதாக இல்லை. நான்

ஜனதா ஆயுர்வேத வைத்தியசாலை
JAVS
உரிமையாளர்
M. அமீர்பாட்சா
மதராஸ் ஸ்டேட் சோல் ஏஜண்ட்
54, மேற்கு ரெயில்ரோடு, திண்டுக்கல்.

ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்சி தேவை!

எங்களிடம் கோல்டன் டானிக் [பேட்டன் டானிக்] தசமூலாரிஷ்டம், பிரசாதிக்கசுதா, பாலாமிருதம், சுதாமிருதம், கதலிக்கல்ப்பம், செவனப்பிரகாசம், ரதிரமணன், ஆஸ்த்துமா, க்ஷயம், டி. பி. இவைகளுக்கு சிறந்த லேகியம்

'கருங்குரங்கு ரஸாயனம்'
மற்றும்
'மதுகாசவம்'
முதலிய ஆயுர்வேத மருந்துகளும் கிடைக்கும்.

ஏஜன்சிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

அமெரிக்கக் குடிஅரசுத் தலைவன், நீக்ரோ மக்களின் குடிஅரசுத் தலைவன் அல்ல!

தம்பி! டில்மன்தான் அவ்விதம் சொன்னரே தவிர, அவர் அந்த உயர் பதவி வகிப்பது கண்டு சகித்திட முடியாத நிறவெறியர்கள், டில்மன் கருப்பரின தலைவர், அமெரிக்கக் குடிஅரசுத் தலைவர் அல்ல, அதற்கு ஏற்ற தகுதியும் திறமையும் இல்லை; ஒழுக்கம் இல்லை; உயர் பண்பு இல்லை; கேட்பதற்கே கூசும் பல குறைபாடு கொண்டவர்; குடியன், கூத்திக்கள்ளன்!—என்றெல்லாம் பழி சுமத்தினர்; வெட்டவெளியில் மட்டுமல்ல, அரச அவையிலேயே கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தனர்.

அதிலே அவர்கள் குறிப்பிட்ட பல குற்றச்சாட்டுகளிலே முக்கியமானவை இரண்டு; ஒன்று கம்யூனிஸ்டுகளால் தூண்டிவிடப்பட்ட டர்னரைட் என்ற பயங்கர இயக்கத்தில், டில்மனுடைய மகன் ஜூலியன் ஒரு உறுப்பினன் என்பது; மற்றென்று உயர் நிலையிலுள்ள ஒரு வெள்ளை மாதை டில்மன் கற்பழிக்க முயன்ருர் என்பது.

திடுக்கிடத் தக்க குற்றச்சாட்டுகள் அல்லவா? எப்படி இத்தத் தாக்குதலைத் தாங்கிக்கொள்ள முடியும்? தாங்கிக்கொண்டார்! எப்படி இந்தக்குற்றச்சாட்டுகளை உருவாக்கினர்கள் என்பதையும் டில்மன் எப்படி உறுதியுடன் அவைகளைத் தாங்கிக் கொண்டார் என்பதையும் அடுத்த கிழமை விளக்குகிறேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

ஜெயா பார்மஸி

சியவனமிர்தம்

இழந்த பலத்தை திரும்ப அடைவதற்கு மிகச்சிறந்தது. சளி, இருமல், ஆஸ்த்மா, சத்தமின்மை, காய்ச்சல், நரம்புத்தளர்ச்சி, மலச்சிக்கல் போன்ற வியாதிகளுக்கு பூரணகுணமளிக்கும்.

JEYA

H.O.பெரியகுளம், பாக்டரி: திண்டுக்கல்.

இந்த வாரம்- இந்த நாட்டில்......

ஜெய்ப்பூர், பிப். 10- காங்கிரசின் தீவிர மெம்பர்கள், தமது வருவாயை அறிவித்து, அதில் ஒரு சதவீதத்தைக் கட்சிக்குத் தரவேண்டும் என்ற ஷரத்து நீக்கப்பட்டது.

நேருநகர், பிப். 10- ராஜஸ்தான் முதல் மந்திரி, மோகன்லால் சுகாடியா பதவி விலகினல் கட்சிப் பூசலும், பிளவும் பெரிதாகிவிடும் என்று கருதப்படுவதால், பதவிவிலகத் தேவையில்லை என்று காமராசர் அறிவித்துள்ளார்.

ஜெய்ப்பூர் பிப். 12- மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம், மார்ச்சில் முடிவடையப் போகிறது; நாலாவது திட்டம் இன்னமும் உருப்பெருமல் இருப்பதற்கு முக்கியக்காரணம், அந்நியஉதவி பற்றி நிச்சயமில்லாதிருப்பது தான் என்ருர் உள்துறை அமைச்சர்.

புதுடில்லி, பிப். 11- இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அடுத்த திங்கள் 2-வது வாரத்தில் அமெரிக்கா செல்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை, பிப். 11- ரூ. 20,000 செலவில் லால்பகதூர் சாஸ்திரிக்கு உருவச் சிலையொன்று அமைக்க கார்ப்பொரேஷன் மத்தியக் கமிட்டி தீர்மானித்தது.

புதுடில்லி, பிப். 14- மதுவிலக்குக் கொள்கை சம்பந்தமாக தற்போதைய நிலை 1967 பொதுத் தேர்தல் முடியும்வரை நீடிக்கும் என்று காங்கிரஸ் காரியக் கமிட்டி முடிவு செய்துள்ளது.

அமிர்தசரஸ், பிப். 12- பஞ்சாபி சுபா அமைப்பது பற்றி மத்திய அரசு உடனடியான முடிவு எடுக்கவேண்டும் என்றும், இனியும் தாம் பொறுத்திருக்க முடியாது என்றும் அகாலி தலைவர் சாந்தபதே சிங் அறிவித்துள்ளார்.

புதுடில்லி, பிப். 14- நகரங்களில், உணவு ரேஷனின் அளவை அதிக பட்ச அளவு 7 அவுன்சாக நிர்ணயித்துக்கொள்ள முதலமைச்சர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிருர்கள்.

சென்னை, பிப். 14- மாநில அரசின் செயலகத்தில், நிதி, நீதி, சட்டமன்றம் ஆகியவை நீங்கலாகப் பிற எல்லாத் துறைகளிலும் தமிழைப் பயன்படுத்துவது மே முதல் அமுலுக்கு வருமென்றும், முதல் கட்டமாகத் தமிழ்க் கடிதங்களுக்குத் தமிழில் பதிலனுப்பப் படுமென்றும் அரசு அறிவித்துள்ளது.

புதுடில்லி, பிப். 16- பாலம் விமான நிலையத்தில் இந்தியன் ஏர் லைன்ஸின் விமானமொன்று தீப்பற்றி எரிந்தது. பயணிகள் யாருக்கும் ஆபத்தெதுவும் இல்லை. 10 பேர் காயம் மட்டும் அடைந்தனர். இம்மாதத்தில் இந்தியாவில் இது மூன்ருவது விபத்து என்று அறியபபடுகிறது.

புதுடில்லி, பிப். 15- ரயில்வே பட்ஜெட், மக்களவையில் சமர்ப்பிக்கப்பட்டது. சரக்குகள் ஏற்றுமதிக்குக் கட்டணம் உயர்த்தியுள்ளனர். பட்ஜெட் நிகர வருவாய் ரூ. 22·19 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

கௌஹாத்தி, பிப், 17- அஸ்ஸாம் மெயில் ஒன்று விபத்துக்குள்ளாகியது 27 பேர் பலியானர்கள் என்றும், 34 பேர் காயமடைந்ததாகவும் ஒரு பெட்டி கூரைதகர்ந்தது எனவும் தெரிகிறது.

உலக அரங்கில்

அரசியல் விவகாரங்களில் காட்டப்படும் பெருந்தன்மைக்கும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மைக்கும் மதிப்போ பிரதிபலிப்போ இல்லையென்றால் அடுத்து மேற்கொள்ளவேண்டியன பற்றிப் பொறுப்பில் உள்ளவர்கள் தீவிரமாகச் சிந்தித்தாகவேண்டும்.

டாஷ்கண்ட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் இந்தியா பெருந்தன்மையை மட்டுமல்ல விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை மட்டுமல்ல; தியாகத்தையே புரிந்திருக்கிறது என்று பிரதமர் இந்திராகாந்தி அவர்களால் ஜெய்ப்பூர் மாநாட்டில் பேசப்பட்டது.

ஆனால் பாகிஸ்தானிலிருந்து வெளிவரும் செய்தியோ இந்தியாவின் 'தியாக'த்துக்கு ஏமாற்றம் தரத்தக்க வகையில்தான் இருக்கிறது.

டாஷ்கண்ட் ஒப்பந்தப்படி இரண்டாவது கட்டமாக அமைச்சர்கள் மட்டத்தில் நடைபெற இருக்கும் சந்திப்பில் ஒத்துக்கொண்ட ஆறு பிரச்சனைகளையல்லாமல் 'காஷ்மீர்' பற்றியும் விவாதிக்க வேண்டும் என்று அதிபர் அயூப்கான் மிகவும் அழுத்தமாக விரும்புவதாகப் புதுடில்லி வட்டார அரசியல் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது இத்துணைக் கண்டம் எதிர்பார்க்காததல்ல; ஆனால் விரும்பாதது.

'காஷ்மீர்' இந்தியாவின் ஒரு அங்கம் என்ற உறுதியான நிலையின் மீதுதான் டாஷ்கண்ட் மாநாட்டுக்குச் சம்மதம் தெரிவிக்கப்பட்டது. காஷ்மீரை நீக்கிய ஏனைய எல்லா இந்தியா-பாகிஸ்தான் உறவு முறைகளும் விவாதிக்கப்படல் வேண்டும் என்பதுதான் நமது தரப்பினர் அளித்த சம்மதத்தின உட்பொருள்.

காஷ்மீர்பற்றிய பேச்சே எடுக்காமல் டாஷ்கணட் மாநாடு நடைபெற முடியாது என்பது நமது தரப்பினர் உணராத ஒன்றல்ல. காஷ்மீர் இந்தியாவின் ஒரு அங்கம் என்பதை முன் கூட்டி வலியுறுத்திவிட்டுச் செல்வதற்கான ஒரு அறிவிப்பாகவே அந்த வரம்புமுறை எழுப்பப்பட்டது.

இப்போது டாஷ்கண்ட் ஒப்பந்தம் செயல்முறையாக்கப்படும் இந்த நேரத்தில் அதிபர் அயூப்கான், காஷ்மீர்பற்றிப் பேசவேண்டும் என்கிறார்.

'காஷ்மீர்'-பேச்சுவார்த்தைக்குட்படாத இந்தியாவின் ஒருபகுதி என்ற நமது நிலையை அயூப் உணராதவர் என்று கூறிவிட முடியாது.

திடீரென இந்த விருப்பத்தை அறிவித்திருப்பதற்கான உட்காரணங்கள் இவைகளாகத்தான் இருக்கவேண்டும்.

(1) குடும்பத்தில் மட்டுமல்லாது அரசியலிலும் உறவுகொண்டிருக்கும் அவரது வெளிவிவகார அமைச்சர் பூட்டோ.

(2) வெளிவிவகார அதிகாரிகளில் சில முக்கியமானவர்கள், மற்றும் சில தலைவர்கள், மாணவர்கள் போன்றோர்.

இந்த இரண்டு வகையினரும் 'டாஷ்கண்ட்' ஒப்பந்தத்துக்கு இதுவரையில் மனப்பூர்வமான ஆதரவையோ அல்லது சம்மதத்தையோ அளித்தார்களில்லை.

காஷ்மீரை நீக்கிவிட்டு டாஷ்கண்ட் பேச்சு வார்த்தைக்கு உடன்பட்டது மேற்கண்டவர்களது பூரண அனுமதியைப் பெறவில்லை எனபது பார்வையாளர்கள் அப்போதே உணர்ந்துகொண்ட ஒரு செய்தியாகும்.

இந்த அடிப்படையில்தான் — இத்தகைய "வெறுப்பாளர்"களின் எதிர்ப்புக்களை ஓரளவுக்கேனும் அமைதிப்படுத்த வேண்டிதான்- அதிபர் அயூப் டாஷ்கண்ட் செயல் முறைகளில் "காஷ்மீர்" பற்றியும் பேசவேண்டும் என்ற புதிய பட்டியலையும் சேர்க்கிறார்.

டாஷ்கண்ட் ஒப்பந்தம் நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றால் இரு நாடுகளும்தங்கள்தங்கள்சக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தலாம் என்று அண்மையில் கூட அறிவித்தஅயூப், ஏன் இப்படித்திடீரென சிக்கலைத் தரும் புதிய குழப்பத்தைச் சேர்க்கிறாரோ தெரியவில்லை.

டாஷ்கண்ட் ஒப்பந்தம் உலக நாடுகள் கவனிக்க சோவியத்யூனியனின் தலைமையின் கீழ் உருவான ஒரு அரசியல் ஒப்பந்தம். அதன் செயல் முறைகளில் பாகிஸ்தான் எந்த அளவிலும் ஈடுபடுத்த விரும்பும் மாற்றங்களை உடனுக்குடன் உட் பொருளுடன் உணர்ந்து முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய பொறுப்பு நமது அரசினருக்கு நிரம்ப உள்ளது.

வெளி விவகாரத்துறை அமைச்சரகம் சிறப்பான முறையில் செயல் பட்டால்தான் இந்தியா—பாகிஸ்தான் பற்றிய செயதி விளக்கங்களில் இனிமேலாவது இருள் கப்பாமல் பார்த்துக்கொள்ளலாம்.

—அரசியல் மாணவன்

காங்கிரஸ் சாதனை காணீர்!

12 அவுன்ஸ் ரேஷன்
10 அவுன்சாகக் குறைகிறது!

கோதுமை 2 அவுன்ஸ்தான்!
4 அவுன்ஸ் உத்தரவு ரத்து!!

8-லிருந்து 7-அவுன்சாக
அரிசியின் பங்கு குறையலாம்!

(சென்னை) முதன்மந்திரி தகவல்!

—(தினமணி செய்தித் தலைப்பு)

காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். வி. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.